சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 23 5 7 42 Price 2 Annas

மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

சுதேசமித்திரன் 5-7-1942

சென்றவார நிகழ்ச்சிகள்

பம்பாயில் ராஜாஜி

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் நான்கு நாட்களாக ஜனாப் ஜின்னாவுடன் கலந்து பேசி விட்டு காந்திஜியைக் காண சென்ற மாதம் 28-ந் தேதி மாலை வர்தாவுக்கு புறப்பட்டு விட்டார். ஜனாப் ஜின்னாவைக் கண்டு முஸ்லீம் லீகின் நிலைமை இன்னதென அறிந்து கொள்ளவே ராஜாஜி பம்பாய்க்கு வந்ததாகத் தெரிகிறது: முஸ்லீம் லீக் தலைவருடன் இப்போது சமரஸம் பேச அவர் உத்தேசிக்கவில்லை. மதுங்காவில் அவர் தென்னிந்தியர்கள் கூட்டத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்.

அவர் பேசியதன் விவரமாவது:—இப்போது காங்கிரஸுக்கும லீகுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு ஒரு வடநாட்டு விஷயம் எனச் சொல்லப்படுகிறது: இது தவறு. இதுஒரு தேசியப் பிரச்னையாகும். பாகிஸ்தான் என்பது ஹிந்துக்களின் சொத்தல்ல. ஆனால் பொது ஜனங்கள் அந்த பாகிஸ்தான் தங்களுடைய விலை மதிப்பில்லாத ஆஸ்தி யென்றும், அதை நான் முஸ்லிம்களுக்குக் கொடுத்துவிடச்சொல்வதாகவும் கருதுகிறார்கள். முஸ்லிம்கள் பெருவாரியாகவுள்ள இடங்களில் இப்போதும் முஸ்லீம்கள் தான் ஆட்சி நடத்துகிறார்கள். யுத்தத்துக்குப் பின் அவர்கள் இந்தியாவின் மற்ற பாகத்திலிருந்து பிரிந்து நிற்க விரும்பினால் அப்படியே செய்யட்டும் என்று தான் நான் சொல்லுகிறேன். இதனால் அவ்விதம் பிரிந்து போகாமல் அவர்களை ஹிந்துக்கள் தடுக்கக்கூடாதென்று நான் சொல்ல வரவில்லை. ஹிந்துக்களுக்கு அந்த உரிமை எப்போதும் இருக்கிறது. தற்போது விரோதியால் படையெடுப்பு அபாயம் நேர்ந்திருப்பதால் நாம யாவரும் ஒன்றுபட்டு அவர்களை எதிர்க்க வேண்டியது அத்யாவசியமாகும்.

லீகும் காங்கிரஸும் ஒன்றுபட்டு முயன்றால் காரியம் பலிக்காமல் போகாது என்பதே என் துணிபு, பிரிட்டன் ஜப்பானியரிடம் இந்தியாவைக் கொடுப்பதை விட இந்தியரிடமே கொடுத்து விடும்.

நான் சொந்த லாபம் கருதி இப்போது இந்தப் பிரசாரம் செய்துவருவதாக எண்ண வேண்டாம். பக்ஷபாதமற்ற நிலையில நின்று எனது யோசனையைச் சிந்தித்துப் பாருங்கள். நான் பல வருஷங்களாகக் காங்கிரஸ் ஊழியனாக இருந்து வருகிறேன். இப்போது இந்தியாவின் நன்மைக்கான ஒரு முக்கியப் பிரச்னையை வற்புறுத்த இந்தப் பிரசாரம் செய்துவருகிறேனேயொழிய சொந்த லாபத்தை எண்ணி இத்துறையில் இறங்கவில்லை.

என் மீதும் என் ஸகாக்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போவதாக ஒரு பிரஸ்தாபம் இருக்கிறது. அதற்காக நான் அஞ்சவில்லை. அந்த வழியில் என்னை அடக்கி விட முடியாது. என் மீதும் என் கருத்தை ஆதரிப்பவர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அந்த நடவடிக்கை எடுக்க முற்படுவர்களுக்குத்தான் நஷ்டம்.

* * * *

முன்னேற்றக் கட்சிக்குத் தடை

இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் அகில இந்திய முன்னேற்றக் கட்சி சட்ட வரம்பு மீறிய ஸ்தாபனம் எனப் பஹிரங்கப் படுத்தியிருக்கின்றனர்:

அந்த அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:—

அகில இந்திய முன்னேற்றக் கட்சியில் சம்பந்தப்பட்டவர்கள் அரசருடன் தற்போது போர் நடத்தும் நாட்டினரோடு சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதாகவும்,இந்த ஸ்தாபனம் பிரிட்டிஷ் இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாதகமான முறையில் உபயோகிக்கப்படும் என்றும் மத்திய சர்க்கார் நம்புகிறார்கள். இவ்வித ஸ்தாபனங்கள் நடைபெற அநுமதிக்கக் கூடாதென்றும். இதற்கு ஒருவரும் ஆதரவு அளிக்கக் கூடாதென்றும் பாதுகாப்புச் சட்டப் புதிய விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதியை மீறுபவர்கள் 7 வருஷத்திக்கு அதிகப்படாத தண்டனையோ அபராதமோ அன்றி இரண்டுமோ விதிக்கப் படுவர்.

* * * *

யு. எஸ். ஜனாதிபதிக்கு நேரு கடிதம்

சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் வாஷிங்டனில் கலந்துபேசிய விஷயங்களில் இந்தியப் பிரச்னையும் ஒன்றென பார்லிமெண்டைச் சேர்ந்தவர்கள் கருதுகின்றனர். ரூஸ்வெல்ட்-சர்ச்சில் சம்பாஷணையின்போது வாஷிங்டனில் கர்னல் லூயி ஜான்ஸன் பிரசன்னமாயிருந்ததானது முக்கியமாக எடுத்துக் காட்டப்படுகிறது.

அவர் இந்தியாவிலிருந்து இரண்டு கடிதங்கள் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. முதலாவது காந்திஜி மார்ஷல் சியாங் கெய் ஷேக்குக்கு எழுதிய கடிதத்தின் நகல். அதில் பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புகள் இந்தியாவிலிருந்து வெளியேறுவதென்ற நிபந்தனையின் பேரில் இந்தியா சீனாவுக்குப் பூரண ஆதரவு அளிக்கத் தயாராயிருப்பதாக காந்திஜி கூறியுள்ளார் மற்றொன்று பண்டித ஜவஹர் மிஸ்டர் ரூஸ்வெல்டுக்கு எழுதியுள்ள கடிதம்.

இந்தியப் பிரச்னையை உடனே தீர்க்க வேண்டிய அவசியத்தை மிஸ்டர் ரூஸ்வெல்ட் வற்புறுத்தியிருப்பாரென எடுத்துக் காட்டப்படுகிறது.

இதையொட்டி சர்க்கார் விரைவில் மீண்டும் காங்கிரஸுடன் பேச்சு நடத்த முன் வரலாமெனச் சிலர் கூறுகின்றனர்.

* * *

ரூஸ்வெல்ட்-சர்ச்சில் கூட்டறிக்கை

லிங்கன் நகர சுதந்திரம்

லிங்கன் நகர சுதந்திரம் சமீபத்தில் இங்கிலாந்திலிருக்கும் அமெரிக்க ஸ்தானீகர் மிஸ்டர் வினன்டுக்கு அளிக்கப்பட்டது. 12-ம் நூற்றாண்டில் செய்யப்பட்ட மரப் பெட்டியில் சுதந்திர சாஸனம் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் வாஷிங்டனிலிருந்து திரும்பி வந்து சேர்ந்ததன் பேரில், ரூஸ்வெல்ட்-சர்ச்சில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதன் விவரம் வருமாறு:—

யு. எஸ். ஜனாதிபதியும், பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் யுத்தசம்பந்தமான முக்கியப் பிரச்னைகள் அனைத்தையும் பற்றி ஆலோசித்தனர். நமக்குள்ள அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் மனதில் கொண்டு அவ்விஷயங்கள் ஆராயப்பட்டன. எதிரிகளின் பலத்தை முற்றிலும் உணர்ந்தே நாங்கள் இவ்வாராய்ச்சியை நடத்தினோம்.

தளவாட உற்பத்தி விஷயத்தில் மொத்தத்தில் நிலைமை நம்பிக்கையூட்டுவதாக விருக்கிறது. மாத உற்பத்தி அளவு ஆரம்ப திட்டப்படி இன்னும் உச்ச நிலையை அடையவில்லை. ஆனால் அந்த அளவு வேகமாகப் பெருகி வருகிறது.

யுத்தம் உலகின் பல்வேறு பாகங்களுக்குப் பரவிவிட்டதால். துருப்புகள், தளவாடங்கள் முதலியவற்றை ஆங்காங்கு கொண்டுபோய்ச் சேர்ப்பதே நமக்கு முக்கியப் பிரச்னையாயிருந்து வருகிறது. அச்சுநாட்டு ஸப்மரீன்கள் நமது சாமான் கப்பல்களுக்கு இன்னும் பெருஞ் சேதம் விளைத்து வருகின்றனவாயினும் புதிய கப்பல் உற்பத்தி மாதத்துக்கு மாதம்அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இத்த சம்பாஷணையில் ஏற்பட்ட முடிவை யொட்டி பிரிட்டிஷ் அமெரிக்கக் கடற்படைகள் நமது கப்பல் சேதம் இன்னும் குறையுமாறு செய்யுமென நம்பப்படுகிறது.

யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கான முறையில் நேசதேசங்களிடையே இவ்வளவு பூரணமான அபிப்பிராய ஒற்றுமை இதற்கு முன் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. ஜெர்மனியின் முக்கிய தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் ரஷ்யா எதிர்த்து நிற்கும் முறையை நாங்கள் பாராட்டுகிறோம். சீனப்படை போராடும் வகை கண்டு எங்களுடைய மகிழ்ச்சி கொஞ்சமன்று. ஜப்பானுக்கு விரோதமாகவும், சீனாவுக்கு நிவாரணமளிக்கவும் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து நாங்கள் எங்களுடைய ராணுவ ஆலோசகர்களுடன் கலந்து பேசினோம்.

நாங்கள் எங்கள் திட்டங்களை வெளியிடுவதற்கில்லை. ஆனால் இனி எடுத்துக்கொள்ளும் போர் நடவடிக்கையின் மூலம் ஜெர்மன் படை பலம் ரஷ்யப் போர் முனையினின்றும் வேறு முனைகளுக்குத் திரும்புமென்று சொல்லலாம்.

நாம் வெற்றி பெறுவதற்கு, சென்ற வருஷம், ஆகஸ்டு அல்லது டிஸம்பர் மாதத்தில் இருந்ததைவிட இப்போது மொத்தில் நிலைமை அதிக அனுகூலமாயிக்கிறதென்பதில் சந்தேகமில்லை

மேற் கண்ட அறிக்கையிலிருந்து பிரிட்டிஷ். யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற் படைகளிடையே இன்னும் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

என் விருப்பம் நிறைவேற.....

—மகாத்மாஜியுடன் பேட்டி

சமீபத்தில் மகாத்மாஜி அமெரிக்க பத்திரிகாப்பிரதிநிதியான மிஸ்டர் ப்ரஸ்டன் குரோவருடன் பல முக்கிய விஷயங்களைப்பற்றி சம்பாஷித்தார். அதன் விவரம் வருமாறு:—

இந்தியா இப்பொழுது இங்கிலாந்துக்கு வீண் சுமையாக இருக்கிறது. இந்தியாவுக்கு யுத்தத்தில் மனமே இல்லை. இந்நாட்டின் கண்களெல்லாம் இப்பொழுது ஜப்பானிடம் இருக்கிறது. இந்தியாவின் மூலாதாரங்களை நீங்கள் தற்காலம் பெற்று அனுபவித்து வரலாம். ஆனால் இதெல்லாம் இந்தியாவுக்கு மனமில்லாமல் எடுத்துக்கொள்ளப் படுவதாகும். இந்தியா ஒரு சவம் போலவே இருக்கிறது. இதன் பளு காரணமாகவே உங்களுக்கு வெற்றியேற்படுவது அசாத்தியமாகி விடும். எதிர்பாராது திடீரென ஏதாகிலும் நேர்ந்து இங்கிலாந்துக்கு நல்ல புத்தி வந்து, நேசதேசங்களுக்கும் நல்லபுத்தி வந்து, இந்த சவ பளுவை நாம் ஒழித்து விடுவோம் என்று அவை கூறும் பக்ஷத்தில் அந்த ஒரு செய்கையே நேசதேசங்களுக்கு பெரிய சக்தியை அளிக்கும். இந்த சக்தி எந்த ராணுவ பலத்தினாலும் அமெரிக்க உதவியினாலும் ஏற்படாது.

'பாக்கியுள்ள யுத்தகாலத்தில் தங்கள் நடவடிக்கைகளின் தன்மை என்னவாகுமென்பதுபற்றி அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பலர் கேள்வி கேட்டிருக்கின்றனர். அதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன்' என்பதாக மிஸ்டர் குரோவர் கேட்டார்.

"யுத்தம் எப்பொழுது முடியுமென்று தாங்கள் சொல்லுவீர்களா?" எனச் சிரித்துக்கொண்டே காந்திஜி கேட்டார்.

மிஸ்டர் குரோவர் முதல் விஷயத்தையே தொடர்ந்து கேட்டார்:—தாங்கள் புதிய இயக்கம் ஆரம்பிக்கப்போவது பற்றிப் பல ஹேஷ்யங்கள் வெளியாகின்றனவே அதன் தன்மை என்ன?

காந்திஜி:— கவர்ன்மெண்டும் ஜனங்களும் அளிக்கும் பதிலை அது பொறுத்திருக்கிறது. இங்கு பொது ஜன உணர்ச்சி எவ்விதம் உருவாகிறதென்பதை அறிய விரும்புகிறேன், அத்துடன் உலகின் மற்ற பாகங்களில் இதனால் ஏற்படக்கூடிய மாறுதல்களையும் அறிய விரும்புகிறேன்,.

மிஸ்டர் குரோவர்:—பதில் என்றால் தங்கள் புதிய இயக்கத்திற்குத் தானே சொல்லுகிறீர்கள்?

காந்திஜி:—ஆம், இந்தியாவில் இன்றே பிரிட்டிஷ் ஸர்க்கார் முடிவுற வேண்டுமென்ற எனது யோசனைக்கு ஏற்படும் ஆதரவையே குறிப்பிடுகிறேன், ஏன்? இதைக் கேட்டு நீங்கள் ஏதாகிலும் திடுக்கிடுகிறீர்களோ?

குரோவர்:—இல்லை. தாங்கள் இதற்குத்தானே இவ்வளவு காலமாக உழைத்து வருகிறீர்கள்?

காந்தி:—அது தான் சரி; இதற்காக நான் வருஷக் கணக்காக உழைத்து வருகிறேன். இப்பொழுது அது திட்டமாக உருப்பெற்றிருக்கிறது. உலக சமாதானத்தை உத்தேசித்து இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கியம் போகவேண்டுமென்று நான் கூறுகிறேன். இந்தியா சுயேச்சையடைந்தால் அது நேசதேசங்களுக்கு மிகுந்த ஆதரவை அளிக்கும். இந்தியா ஒடுக்கப்பட்டிருப்பதான குற்றத்திற்கு அமெரிக்காவும் ஜவாப்தாரியாக இருக்கிறது.

அடுத்தபடி என்ன?

குரோவர்:—இந்தியாவுக்குப் பூர்ண சுயேச்சையளித்த பின்னர் அமெரிக்கப்படைகளும் நேசதேசப் படைகளும் இந்தியாவிலிருந்து போராட முடியுமென்று நினைக்கிறீர்களா?

காந்திஜி:—ஆம், போராட முடியும். அப்பொழுதுதான் உண்மையான ஒத்துழைப்பு ஏற்படக்கூடும். இல்லாவிடில் நீங்கள் செய்யும் எந்த முயற்சியும் வீணாகிவிடும், சுயேச்சைக்குப் பின் நேச தேசப் படைகள் முழுவதும் இந்தியாவை விட்டுப் போய்விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை இதைப் பற்றி மிகுந்த தப்பபிப்ராயம் இருப்பதால் நான் ஹரிஜனில் எழுதுவதையெல்லாம் கவனியுங்கள்.

குரோவர்:—தங்களுடைய யோசனை நிராகரிக்கப்படுவதாக வைத்துக் கொள்ளுவோம். அடுத்தபடி தாங்கள் என்ன செய்வீர்கள்?

காந்திஜி:—உலகம் முழுவதும் உணரும்படியான நடவடிக்கை எடுத்துக் கொள்வேன். பிரிட்டிஷ் படைகளின் நடவடிக்கைகளில் அது குறுக்கிடாது. ஆனால் பிரிட்டிஷார் அதைக் கவனிக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்படும். என்னுடைய யோசனையைப் பிரிட்டிஷார் நிராகரிப்பது பெரிய தவறாகும்: பிரிட்டிஷார் ஜயிக்க வேண்டுமென்பதற்கோ அல்லது சீனாவை அது பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவோ இந்தியா இழிவான முறையில் அடிமையாக இருக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

குரோவர்:—கவர்ன்மெண்ட் நிர்வாக ஆதிக்கியம் தளர்த்தப்பட வேண்டுமென்பதுதான் தங்கள் கருத்தா? ராணுவ நடவடிக்கைகளைத் தாங்கள் தடுக்கப் போவதில்லையா?

காந்திஜி:—எனக்குத் தெரியாது. கலப்பில்லாத சுயேச்சை எனக்கு வேண்டும். ராணுவ நடவடிக்கைகள் எங்கள் மீதுள்ள ஆதிக்கியத்தை வலுப்படுத்த உபயோகிக்கப்படுமாயின் அதை நான் எதிர்ப்பேன். என் சுயேச்சையை விடுத்து பிறருக்கு உதவ வேண்டுமென்ற தர்ம சிந்தை எனக்கில்லை. இந்தியாவை ஒடுக்கி வருவதான பாபச் செயலையும், நீக்ரோவர்களையும் மற்ற ஆப்பிரிக்க ஜாதியினரையும் ஒடுக்கி வருவதான பாபச் செயலையும் புரிந்து வரும் வரையில் நேசதேசத்தினர் இப்போது நடத்தும் போராட்டத்தில் பெரிய தர்மம் இருப்பதாகக் கூறுவதில் அர்த்தமில்லை.

ஏன் பொறுத்திருக்கக் கூடாது?

இந்தியா சுதந்திரம் பெற வெற்றி கிடைக்கும் வரையில் ஏன் பொறுக்கக் கூடாதென மிஸ்டர் குரோவர் கேட்டார்.

சென்ற உலக யுத்தத்தில் வெற்றியேற்பட்டதன் பயனாக இந்தியாவுக்குக் கிடைத்தது ரவுலட் சட்டமும், ராணுவ அமுலும், அமிருதஸரஸ் சமபவமும் தான் என காந்திஜி கூறினார்.

'இந்தியா மீதுள்ள பிடிப்பை விட்டுவிடுமாறு பிரிட்டனைத் தூண்டுவதில் அமெரிக்காவிடமிருந்து நீங்கள் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவில்லை போலும்?, என்று மிஸ்டர் குரோவர் கேட்டார்.

"எதிர்பார்க்கவில்லையா? கண்டிபபாகஎதிர்பார்க்கிறேன்" என்று காந்திஜி பதிலளித்தார்.

'அதில் ஏதாவது வெற்றி கிடைக்குமா?"

"அநேகமாகக் கிடைக்கலாம், இந்தியாவின் கோரிக்கை நியாயமானதென்று அமெரிக்கா உறுதியாக நம்பினால், அது நியாயத்தைப் பூரணமாக ஆதரிக்குமென்று எதிர்பார்க்க எனக்குச் சகல உரிமையும் உண்டு" என்றார் மகாத்மா.

"பிரிட்டிஷார் இந்தியாவில் இருபபதை அமெரிக்கா ஆதரிக்கக் கட்டுப்பட்டிருப்பதாக நீங்கள் எண்ணவில்லையே?"

"இல்லை; ஆனால் பிரிட்டிஷார் ராஜ தந்திரத்தில் வல்லவர்கள்; ஆகவே இந்தியாவுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆவல் ரூஸ்வெல்டுக்கு இருந்தாலும் கூட அமெரிக்கா வெற்றி பெறாமல் போகலாம. அமெரிக்காவில் இந்தியக் கோரிக்கைக்கு விரோதமாகப் பிரிட்டிஷார் பலத்த பிரசாரம் செய்து வருகின்றனர். நிர்வாகத்தைப் பாதிக்கும் வகையில் பொதுஜன அபிப்பிராயம் அவ்வளவு சக்தி படைத்ததாக இல்லை."

பலன் மெதுவாக ஏற்படலாம் என்று கூறிக்கொண்டே மிஸ்டர் குரோவர் குறுக்கிட்டார்.

"மெதுவாகவா? பொறுத்துப் பொறுத்து நான் அலுத்துப் போய் விட்டேன். இனி என்னால் பொறுக்கமுடியாது. இந்த யுத்தத்தில் அபிப்பிராயம் வெளியிட 40 கோடி மக்களுக்கு உரிமை இல்லாதது கொடிய விபத்தாகும். நம்முடைய பங்கைச் செய்ய நமக்குச் சுதந்திர மிருந்தால் ஜப்பானின் முன்னேற்றத்தைத் தடை செய்யவும் சீனாவைக் காக்க உகந்தான காரியங்களைச் செய்யவும் நம்மால் முடியும். சுற்றியுள்ள நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது. செத்த பிணம் உயிர் பெறுவது எங்காவது உண்டா? இப்பொழுது இந்தியா நேச நாடுகளுக்கு வெறும் சுமையாகவே இருந்து வருகிறது" என்று மகாத்மா உரைத்தார்,

"பிரிட்டனுக்கு அமெரிக்கா சரியானபடி நிர்ப்பந்தம் உண்டு பண்ணினால் நீங்கள் உருவான வகையில் உதவுவீர்கள் அல்லவா?" என்று மிஸ்டர் குரோவர் வினவினார்.

மனப்பூர்வமான ஒத்துழைப்பு

"நானா? நான் என்ன ஒரு பெரிய ஆளா? எனக்கோ வயது 73 ஆகிவிட்டது. ஆனால் சுதந்திரம் பெற்ற இந்தியாவின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். என் ஒத்துழைப்பு இருக்கவே இருக்கிறது. என்னாலியன்றதை வாராவாரம் எழுதுகிறேன். இந்தியாவின செல்வாக்கல்லவா முக்கியம? சுதந்திரம் பெற்ற அந்த க்ஷணமே சுதந்திரத்தைப் போற்றி அதைக் காப்பதற்காக நாம் போராடக் கிளம்பிவிடுவோம்" என்று காந்திஜி திடமாகக் கூறினார்.

"இந்தியாவிலிருந்து இன்னும் பத்திரமான ஒரு தளத்துக்கு வாபீஸாகும்படி ஜப்பானியர் நேச நாட்டினரை நிர்ப்பந்தித்தால் ஜப்பானியருக்கு விரோதமாக இந்தியா பூராவும் ஆயுதம் தாங்கிக் கிளம்பிவிடுமென்று இன்று நான் சொல்ல முடியாது. பர்மியரில் சிலர் செய்த மாதிரி அவர்கள் தங்களை இழிவுபடுத்திக்கொள்ளுவரோ என்பதே எனது பயம். இந்தியா பூராவும் ஒருமுகமாக நின்று ஜப்பானை எதிர்க்கவேண்டுமென்பதே எனது விருப்பம். இந்தியா சுதந்திர நாடாக இருந்தால் அப்படித்தான் செய்யும்."

வகுப்புச் சச்சரவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. மூன்றாவது ஆசாமி போய்விட்டால் தானாகவே ஒற்றுமை ஏற்பட்டு வீடும். நம்மை வேறுபடுத்தி வைத்திருக்கும் பிரிட்டிஷ் அதிகாரம் மறைந்தால் வகுப்புச் சச்சரவும் மறைந்துவிடுமென்பதே எனது நம்பிக்கை" என்று காந்திஜிமேலும் குறிப்பிட்டார்.

சீவக சிந்தாமணி 2.

மன்னவன் பகையான தெய்வம்

★

வ. வேணுகோபாலன் எழுதியது

கட்டியங்காரன் அரசாட்சியைப் பெற்ற அன்றே, தனது அதிகாரம் முழுவதையும் செலுத்தலானன். நிமித்திகன் ஒழிந்த மற்றைய மந்திரிகளைத் தன் கீழ் ஏவல் செய்யுமாறு செய்வித்தான். சேனுதிபதியான அசலனைத் தன் கீழ்ப்படியும் படிச்செய்தான். சேனையின் தலைமைப் பதவியைத் தானே ஏற்றுத் தன் கட்டளைப்படிப் படைகளைப் பலவாறு திருத்தியமைத்தான். அதிகார வன்மை பெற்ற கட்டியங்காரனை மீற எவரும் துணிந்திலர்.

ஒரு நாள் காலையில் கட்டியங்காரன் சபை கூட்டினுன். மந்திரியர், சேனுதிபதிகள், மற்றைய பிரதானிகள் சிற்றரசர் முதலியோர் சபையில் வந்தமர்ந்தனர். கட்டியங்காரனுக்கருகில், அவன் மைத்துனனை மதனன் என்னும் மகாவீரன் வந்தமர்ந்தான்.

"சபையோர்களே! நான் என்ன சொல்வேன்; அதை நினைக்கவும் சொல்லவும் என மனம் நடுங்குகிறது. நேற்றிரவு நான் தனித்து உறங்குகையில், என்னை ஒரு பூதம் தட்டி எழுப்பியது; நான் திடுக்கிட்டெழுந்து யாரென்று பார்த்துப் பயந்தேன், நீ யார்? எங்கு வந்தாய்?. என்று கேட்டேன். அப்பூதம் சற்றும் அஞ்சாமல் என்னைப் பயமுறுத்தி "யான் மன்னவன் பகையானதொரு மாதெய்வம்; நீ அவனை நாளைக்குள் கொன்றிட வேண்டும்; இன்றேல் உன் உயிரை யான் உண்டிடுவேன்' என்று கூறி மறைந்தது; ஆனல் இப்பொழுதும் அப்பூதத்தின் உருவம் என் கண்முன் நின்று பயமுறுத்துகிறது. யான் என்ன செய்வதென்பதற்கு நீங்களே ஒரு வழி கூற வேண்டும்" என்று இடி போல கர்ச்சித்துக் கூறினன் கட்டியங்காரன். அவன் குரலிலே, பயங்கரமும், கொலைத் தன்மையும் கூத்தாடின.

இடி விழுந்தாற்போன்ற அச்சொற்களைக் கேட்ட சபையோர் மனம் மருண்டு மறுமொழி ஒன்றும் கூறுதற்கு இயலாதவராய்த் தலை குனிந்திருந்தனர்.

அக்கொடுஞ் சொற்களைக் கேட்டு மனம் பொறுக்காத தருமதத்தன் என்னும் இளைய மந்திரி, மிக்க கோபாவேசமுடையவனுய்க் கட்டியங்காரன் முன்பு போய் நின்றுன்;

"கட்டியங்கார! யான் கூறுவதைக் கேள்; அரசன் விசயையிடத்துள்ள காதலால் அந்தப்புரமே கதியாக வாழ்கின்றுன். அறிவில் மிக்க நிமித்திகன் மந்திரிப் பதவியை நீத்துத் துறவு பூண்டு வாழ்கின்றுன். ஆதலால் உனக்குப் புத்தி கூறுபவர் இங்கு எவரும் இல்லை, தன்னையாக்கிய தரணி மன்னனைக் கொலை சூழ்தல் தருமமன்று. அவ்விதம் செய்தால் உன் குலமும் செல்வமும் உன்னோடு அழிவைப் பெறும்; அரசன் என்னும் தெய்வம் கோபித்தால் உன்னை அழித்துவிடும். உனக்குப் புத்தி கூறிய தெய்வத்தைக் காட்டிலும் என் அரசனுகிய தெய்வம் பெரிதும் வல்லமையுடையது. உன் தெய்வம் சிறப்புடையதல்ல." என்று கூறினன் தருமதத்தன்.

கட்டியங்காரனின் மைத்துனனை மதனன், அச்சொற்களைக் கேட்டு மனம் பொருனுய் கண்ணில் தீப்பொறி பறக்கக் கோபம் கொண்டு, மார்பு விரைக்க எழுந்து நின்று பல்லை நெறு நெறெனக் கடித்தான்.

"அடா! தருமதத்தா. யார் முன்பு இவ்விதம் துணிந்து பேசினுய்? போதும். உன் புத்திமதியை நிறுத்து. பகைவர் தலையை வாளினல் சிந்த அடித்து வஞ்சினம் முடிப்பேனேயன்றி இப்பொழுது ஒன்றும் வாயினுற் பேசேன்; உன் போன்றவர் வாயாற் பேசி யுத்தமென்ருல் வாளெடுக்கக் கைகூசுவர்" என்று மதனன் முழங்கினுன்.

இதுகாறும் பேசாதிருந்த கட்டியங்காரன் மேனியில் முத்துப் போலும் வியர்வைத் துளித்தன. அவனுடைய இரு புருவங்கள் நேரே வளைந்து நின்றன. தனது இரண்டு கைகளையும் கடகம் உடைந்து சிந்தும்படி ஒன்றேடொன்று தட்டிச் சிங்கம் போன்று கர்ச்சித்தான்.

"தருமதத்தா! நீ கூறிய கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர், என்னையொழிய வேறு யார் உள்ளனர்? ஆயினும் யான் முடிவாகக் கூறுவதைக் கேள்; மன்னவர் மன்னனை சச்சந்தனைச் சுற்றத்தோடு, விண்ணுலகிற்கு இறைவனுக்கி, இம்மண்ணுலகைப் பொன் விளையும்படி யான் ஆட்சி செய்வேன்" என்று கூறியபடிக் கட்டியங்காரன் கள களவென்று சிரிக்கலானுன்.

"கட்டியங்கார! நீ கூறிய விதமே பூமியெல்லாம் பொன் விளையக் காவல் செய்; அரசனுக்கும் கொலை அமைவதாக. கொற்றவனைக் கொல்லும் கூற்றம்; நிலமடந்தையாய்க் கொல்லும்; நிதியாய்க் கொல்லும்; தான் செய்த பிழைப்பாய்க் கொல்லும்; யான் செல்வேன்; நீ கோபம் கொள்ளவேண்டா" என்று கூறி, தருமதத்தன் வெளியே சென்றுன்.

சபையிலுள்ள யாவரும் கட்டியங்காரனுடைய ஆணைக்கு அஞ்சிப் பேசாமற் சபையை விட்டு வருத்தத்துடன் அகன்றனர், கட்டியங்காரனும் மதனனும் உவகையோடு தனியிடம் சென்றனர். நகரமாந்தர்க்குக் கட்டியங்காரனுடைய வஞ்சனைச் செய்கை தெரியலாயிற்று; ஆயினும் கட்டியங்காரனுடைய கொடுமைக்கு அடங்கியிருந்தனர்.

மறுதினமே, கட்டியங்காரனும் மதனனுமாக ஆலோசித்து, சச்சந்தனை அவன் சுற்றத்தோடும் கொன்று விடுவதென்றே முடிவுசெய்தனர். உடனே, சச்சந்தனுடைய காமக்கிழத்தியரான பல மனைவியரையும், உறவினரையும் மதனன் சிறை செய்வித்தான். சச்சந்தனுடைய நண்பர்கள் பலரைச் காவலில் வைத்தான், சச்சந்தனைக் கொல்வதற்குச் சம்மதித்த பலர்க்கும் பல உயர்ந்தபதவிகளைக் கட்டியங்காரன் அளித்துச் சிறப்புச் செய்தான். சச்சந்தன் தப்பிப் போகாவண்ணம், பெருஞ்சேனையைத் திரட்டி அணிவகுத்து நகரைச் சுற்றிலும் வளைத்துக் கொள்ளச்செய்தான்.

கட்டியங்காரன், இவ்வாறு அரசனைக்கொல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதை, சச்சந்தனிடம் அன்புள்ள ஒற்ருளான ஒருவன், அவனுக்கறிவிக்க எண்ணி, அந்தப்புரத்திற்கு, மறைவான வழியே ஓடோடியும் வந்தான். அவன் உடல் நடுங்கியது; கால்கள் பூமியில் பதியாமல் பதறினுன்; அரசனைக் கண்டதும் சொல்ல நாவெழவில்லை; அவன் இருகண்களிலும் நீர் ததும்பியது.

"அரசே, பாவியான் கட்டியங்காரன், தங்களைக்கொல்ல வருகிருன்: ஓடித்தப்புங்கள்; ஓடித் தப்புங்கள்" என்று கூறித் திரும்பிப் பாராமல் ஓடி மறைந்தான்.

அச்சொற்களைக் கேட்ட மன்னன் காமத்தால் மதி மயங்கி தன் நிலைமையை அறியாதவனுய், "மந்திரி, நிமித்திகா! எங்கே என் யானை? எங்கே என் குதிரை? வாள் ஏங்கே? சேனுபதி சேனையைத்திரட்டு! காவலாளிகளே கதவடையுங்கள்!" என்று பிதற்றிய விதம் ஓடலானுன். அதைக்கண்ட விசயை அலறிக்கொண்டே ஓடி அரசனை வழி மறித்து நிறுத்தினுள். அப்பொழுது தான் சச்சந்தன் தான் ஆதரவற்ற நிலையிலுள்ளதை உணர்ந்தான். அவன் மனம் அளவுகடந்து சுழன்றது. அவன் மனத்தில் தோன்றிய ஏக்கம், கோபமாக மாறியது. சுவர் செவிடுபடும்படி உரக்கச் சிரித்துத் தன் உடைவாளை உறையினின்றும் எடுத்து உயரத் தூக்கினுன்: கருப்பம் கொண்ட தன் மனைவி அலறுவதைக் கண்ணுல் கண்டு அவன் மனம் மீண்டும் சோகத்திலாழ்ந்தது.

"விசயை. நீ அன்று கண்ட மூன்று கனவுகளில் முதற்கனவின் பயன் இதுதான்; ஆனல் நீ கவலைப்படாதே; நீ கருப்பமுற்றிருக்கிருய்; தாமதியாதே: இதோ இந்த மயிற் பொறியில் ஏறி ஆகாய மார்க்கமாக வேறு ஊரில் போய்த் தங்கிவிடு; நம் புத்திரன் பொருட்டாக நீ உயிர் வாழவேண்டும்". என்று கண்ணீர் விட்டான்.

அதைக் கேட்ட விசயை மன்னவன் பாதத்தில் வீழ்ந்து புரண்டாள். "ஐயோ! முதற் கனவின் பயனிதுவோ! விதியே! தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா? மன்னவனைப் பறிகொடுக்கப் பாவியேனை ஏன் படைத்தாய்? எங்ஙனம் பிரிந்து செல்வேன்" என்று புலம்பினுள்.

"விசயை! இனி தாமதம் தகாது; ஆபத்து நெருங்கி விட்டது; புத்திரனைக் காப்பாற்று; யாருக்கு யார் துணை?" என்று கூறி விசயையைத் தூக்கி மயிற் பொறியில் வைத்து இயக்கி மேலே எழுப்பிவிட்டான். இரு தலைக் கொள்ளியிடத்து எறும்பு போல விசயை மயிற் பொறியில் மயங்கிக் கிடந்தாள்.

மயிற் பொறி மறையும் வரையில் சச்சந்தன் வானை நோக்கியிருந்தான். அப்பொழுது திடீரென யுத்தபேரிகை முழங்கியது. அந்தப்புரவாயில்கள் உடைக்கப்பட்டு சேனைகள் சச்சந்தனை நெருங்கின. சேனையின் ஆரவாரம் சச்சந்தனைப் பிரமிக்கச் செய்தது. சச்சந்தன் உருவிய வாளுடன், பிரளயகால ருத்திரன் போல் தனியே நின்று போர் செய்தான். கடல் தனக்குக் காவலான கரையை உடைப்பது போல், சேனையும் தனக்கரசனை சச்சந்தனைத் தாக்கியது. இருளில் மின் தோன்றியது; கட்டியங்காரன் யானை மீது வெளிப்பட்டான்; சச்சந்தன் தன் வாளாயுதத்தை வீசி அவன் யானையின் துதிக்கையை வெட்டியெறிந்தான். கட்டியங்காரன் தன் கையிலிருந்த வேலை சச்சந்தன் மார்பிற் பதிய எறிந்தான். வேந்தன் மார்பு பிளந்து, குருதி சோர வீர சுவர்க்கமடைந்தான். உடனே சய பேரிகை முழங்கியது. கட்டியங்காரன் ஏமாங்கத நாட்டிற்கு இறைவனுனன். சச்சந்தன் பிரிவால் நகரமாந்தர் துக்கக் கடலில் மூழ்கினர். நாடு ஒளியிழந்தது. கட்டியங்காரன் முடி சூடிய மன்னனுயினுன்.

(அடுத்த வாரம்: மயானத்திற் பிறந்த குழந்தை).

பண்டைகாலப் போர்முறை

யானையும் குதிரையும்

★

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

பழைய காலத்திலே ஸைன்யத்தில் காலாட்படைக்கு அடுத்தபடியாகக் குதிரைப் படையே எண்ணிக்கையிலும் முக்கியத்துவத்திலும் சிறந்து விளங்கியது. தொகையில் குறைந்திருந்தாலும் சில சமயங்களில் முக்கியத்துவத்தில் குதிரைப் படையே முதன்மை ஸ்தானமும் பெற்றிருந்திருக்கிறது. மத்திய காலத்தில் தென்னுட்டை முகம்மதியர்கள் படையெடுத்து வந்த சமயங்களில் குதிரைப் படையே பெரும் போர்களை நடத்தி வெற்றி கொண்டன.

அப்படியிருந்தும் குதிரைகள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதியாகி வந்தன. நம் நாட்டுக் குதிரைகளை அதிகமாகப் படையில் எடுத்துக்கொள்ளவில்லை. இவை நன்ருக வளர்ச்சி பெருமல் குட்டையாகவும் உடல் மெலிந்தும் காணப்பட்டமையே இதற்குக் காரணம் போலும்: போர்க்களில் நேரிடும் இடுக்கண்களை அவை தாங்கமுடியாது என்று நினைத்தனர் போலும்!

நம் நாட்டுப் பட்டாளத்துக்கு வேண்டிய குதிரைகள் பெரும்பாலும் அரேபியா முதலிய தேசங்களினின்றும் வந்தன. அவற்றை அப்படியே அரசாங்கத்தில் எடுத்துக்கொண்டு விடுவார்கள். சாதாரணமாக அந்தக் குதிரைகள் ஒவ்வொன்றும் திறமைக்கும் ஜாதிக்கும் தக்கபடி நானூறு ரூபாயிலிருந்து ஆயிரத்து இருநூறுவரையில் மதிப்பிடப்பட்டுவந்தது.

குதிரை வீரர்

நம் மன்னர்கள் அவற்றை நன்ருகப் போஷித்துப் பராமரித்து வந்தனர். போருக்குப் போகும் காலங்களில் அவற்றை ஒன்ருக அலங்கரித்து அனுப்புவர். அவற்றுக்கும் கவசம் தரிப்பார். சேணத்திலேயே வில் அம்பராதூணி, பூட்டாக்கத்தி, கேடயம், உடைவாள், வேல் முதலியன வைக்கப்படுவதற்குத் தக்கபடி அதைச் செய்திருப்பார்கள். குதிரையின் முகத்தை மறைத்துக் கல் இழைத்த தகடுகளாலான ஒரு முகமூடி போட்டிருப்பார்கள். குதிரை வீரர்கள் தங்கள் உயிரைக் காட்டிலும் குதிரையை அதிகமாகவே மதித்துப் பாதுகாத்தனர்.

குதிரை வீரர்கள் சாதாரண காலாட்படையைச் சேர்ந்தவர்களைப் போலவே கவசம் தரித்திருப்பர். ஆனல் அவர்கள் தலைக்கு அணிந்து கொள்ளும் மூடி மட்டும் வேருக இருக்கும். அது பின்புறம் கீழே வந்து கழுத்தை நன்ருக மூடிப்பாதுகாக்கும். அவர்கள் தங்கள் இடுப்பில் வார் அணிந்து, அதில் கத்தி, கோடரி முதலியவற்றைச் செருகி இருப்பர். கையில் நீண்ட வேல் அல்லது ஈட்டி இருக்கும்.

குதிரைக்கு அடுத்தபடியாக யானையைச் சொல்லலாம். போர்க்களத்துக்குச் செல்லும் யானைகளுக்கும் கவசம் தரிப்பது வழக்கம். அது பெரும்பாலும் இரும்பால் செய்யப்பட்டதாகவே இருக்கும். தந்தங்களில் நன்ருகத் தோய்த்துச் சாணை பிடித்துக் கூர்மையாகச் செய்யப்பட்ட கத்திகளைக் கட்டி விடுவார்கள். அவற்றுல் அந்த யானைகள் எதிரிகளின் மத்தியில் புகுந்து அட்டகாசம் செய்து கும்பல் கும்பலாக வெட்டி வீழ்த்துவது சுலபமாக முடியும்.

ஒவ்வொரு யானையின் முதுகிலும் ஒரு பெரிய அம்பாரி வைக்கப்பட்டிருக்கும், அந்த அம்பாரிகள் ஒவ்வொன்றிலும் சுமார் பத்துப் பன்னிரண்டுபேர் ஏறிச் செல்ல முடியும். அவர்கள் பக்கத்துக்கு மூன்று நான்கு பேர்களாக உட்கார்ந்து கொண்டு போர் புரிவர்.

ஒட்டகைப் படை

பண்டைக் காலத்திலே நம் நாட்டு மன்னர்கள் துப்பாக்கி பீரங்கி முதலியவற்றை அதிகமாக வைத்திருக்கவில்லை. முகம்மதியர்களுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்த காலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சம் அவற்றை வைத்திருந்தனராயினும், அவற்றைத் தனிப் பகுதியாகப் பிரித்து அந்தப் படையை அபிவிருத்தி செய்யவில்லை.

ராஜதர்மங்களைப் பற்றிக் கூறும் நூல்களில் யானை குதிரைகள் சரியாகக் கிடைக்காவிட்டால் அவற்றுக்குப் பதிலாக ஒட்டகைகளையும் காளை மாடுகளையும் உபயோகிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

விஜய நகர ஸாம்ராஜ்யத்தில் பதினயிரம் ஒட்டகைகளைக் கொண்ட ஒரு படை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கோட்டைகளைக் காப்பதற்காக மதில்களில் ஏற்றிச் சுடும் பீரங்கிகளைப்போலவே போர்க்களின் மத்தியிலும் பீரங்கிகளைக் கொண்டு சென்று எதிரிகளைச் சுட்டு வீழ்த்தி வந்தனர். அவ்விதம் கொண்டு போகும் பீரங்கிகளை ஒட்டகைகளின் மீதே ஏற்றிச் சென்றனர்.

விஜயநகரத்திலிருந்த படையில் ஏராளமான காளை மாடுகள் இருந்தனவென்றும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் அவை குதிரைகளைப்போலப் போர் வீரர் ஏறிச்சென்று போர் புரிவதற்கு உபயோகப்பட்டனவென்று தெரியவில்லை. ஸைன்யத்தின் மூட்டை முடிச்சுகளை ஓரிடத்தினின்றும் மற்ருேரிடத்துக்குத் தாங்கிச் செல்லவே உபயோகப்பட்டு வந்தன. அந்த வேலைக்கு மாடுகளைப்போலவே கழுதைகளும் சில சமயங்களில் உபயோகப்பட்டன.

கடற்படை

இவற்றைத் தவிர பழைய அரசர்கள் கடற் படையையும் வைத்திருந்தார்கள். மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழ்நாட்டு மக்கள் கடல் நடுவில், மரக்கலம் செலுத்திப் பிற நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தனர் என்பதை நாம் அறிவோம். ஆனல் அவர்கள் தங்கள் கப்பல்களை எப்படிக் கட்டி முடித்தனர், ஒவ்வொரு கப்பலிலும் எவ்வளவு பேர் ஏறிச் செல்லமுடியும் என்பனபோன்ற விஷயங்களை நிச்சயமாகக் கூறக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை; ஆயினும் வியாபாரத்துக்கு உபயோகப்பட்டு வந்த கலங்களைக் கொண்டும், அவற்றைப் பற்றிப் பிறநாட்டார் எழுதிவைத்துள்ள குறிப்புகளைக் கொண்டும் நாம் ஒருவாறு கூறலாம்.

இப்பொழுதுள்ள கப்பல்களைப் போல முன்னுளில் கட்டவில்லை. தமிழ் நாட்டவர் கட்டிய கப்பல்களில் மரப் பலகைகளை ஆணி அடித்து ஒன்று சேர்க்கவில்லை; அவற்றை நன்ருக இழைத்து இணைத்துப் பொருத்திக் கடைசியாகக் கயிறு கொண்டு கட்டியே வந்தார்கள்.

சோழ சாம்ராஜ்யம் மகோந்நத ஸ்திதியில் இருந்த காலத்தில் இலங்கைத் தீவு மட்டுமல்லாமல் மலேயா தீபகற்பமும் அதைச் சேர்ந்த தீவுகளும் சோழர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அதே போல விஜய நகர ஸாம்ராஜ்யம் உச்சஸ்தானத்தை அடைந்த காலத்தில் அது இலங்கைத் தீவையும், பர்மாவில் 'தென்சரீம்' என்னு வழங்கப்படும் பிரதேசத்தையும் தன்னுள் அடக்கி ஆண்டு வந்தது.

பண்டை காலத்தில்

விஜய நகர சக்ரவர்த்திகள் தங்களைப் பூர்வ, தக்ஷிண பஸ்சிம, ஸமுத்ராதிபதிகள் என்று கூறிக் கொண்டனர். அன்றி அவர்கள்கரையோரமாக இருந்த முன்னூறு துறைமுகப் பட்டிணங்களைக் காத்துக் கடல் மூலமாக பிற நாட்டார் தம் நாட்டைத் தாக்கிக் கொள்ளையடிக்காமல் பாதுகாத்து வந்திருக்கின்றனர். இவற்றைச் செய்வதற்குத் தக்க கடற்படையொன்று இருந்திருத்தல் அவசியம்: அவற்றைப்பற்றிய முழு விவரங்கள் இப்போது கிடைக்கவில்லை.

இவ்வகைப் படைகளுள் எதைச் சேர்ந்தவனுகை இருந்தாலும் அவனைப்படையில் சேர்த்கொள்வதிலும் அவனுக்கு வேண்டிய பயிற்சியை அளிப்பதிலும் பண்டை காலத்து அரசர்கள் கவனமாக இருந்திருக்கிருர்கள். "படையதிகாரிகள் ஒருவனைப் பட்டாளத்தில் சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் அவன் ஆடைகளை எடுத்துவிட்டு, அவனை நன்ருக முன்னும் பின்னும் திருப்பிப் பரிசோதித்துப் பார்ப்பர். அவன் உயரம் அகலம் முதலியவற்றை அளந்து குறித்துக்கொள்வார். அவன் பெயர் என்ன, எந்த நாட்டைச் சேர்ந்தவன், அவனுடைய தாய் தந்தையரின் பெயர் முதலியவற்றை விசாரித்து அறிந்து அவற்றையும் குறித்துக்கொள்வர். இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவ்விடத்திலேயே அப்பொழுதே சேர்த்துக்கொள்ளப்படுவர். அவனுக்கு ஊருக்குப் போய் வர அனுமதி கிடைக்காது. அனுமதியில்லாமல் ஓடிப் போய்விட்டால், அவன் பிடிபட்டதும் மிகவும் துன்புறுத்தப்படுவான்." இவ்விதம் நேரில் பார்த்துவிட்டுக் கூறுகிருர் பர்போஸா (Barbosa) என்னும் ஆசிரியர். அவர்கள் படையில் கொஞ்ச காலம் பயிற்சி பெற்று ஒழுங்கு அறிந்த பிறகே ஊருக்குச் சென்று வர அனுமதிக்கப்படுவர்.

பயிற்சி முறை

போர் வீரர்களுக்கு வில் வாள் முதலிய ஆயுதங்களை வீசப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. அவற்றுக்கெனத் தனித்தனியாகக் கமிட்டிக் கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன. குஸ்தி, முஷ்டி யுத்தம் முதலியனவும் செய்வர்.

அவர்கள் பொதுவாகக் காலையில் எழுந்திருந்தவுடன் காலபடி நல்லெண்ணெயைக் குடித்துவிட்டு அந்த எண்ணெயையே உடலிலும் தேய்த்துக் கொள்வார்கள். பிறகு வேஷ்டியை விரித்து கட்டிக்கொண்டு, கரடிக் கூடத்தில் கதை முதலியவற்றைச் சுழற்றியும் வாள் வீசியும் பயில்வர். அவர்கள் கொண்ட எண்ணெய் முழுதும் வேர்வை உருவமாக வெளிபடும் வரையில் அவ்விதம் பயில்வர். அப்பால் ஒருவரோடொருவர் குஸ்திச் சண்டைப் போடுவர். இவ்விதம் அவர்கள் ஒவ்வொரு தினமும் பயின்று போருக்குக் கிளம்பத் தயாரான நிலையில் தங்கள் உடலை எப்போதும் வைத்திருப்பர்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தின் முக்கிய கட்டடங்களில் ஒன்று.

* * * *

ரங்கூனில் எதிரி விமானங்கள்

இம்மாதம் 1-ந்தேதிராத்திரி நான்கு தடவை எதிரி விமானங்கள் வந்தன. நகரின் வட பாகத்தில் சில குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் விமானங்கள் அதிககாலம் இருக்கவில்லை. கடைசி மூன்று தடவை விடுக்கப்பட்ட அபாய அறிவிப்புகள் அபாயம் நீங்கி விட்டதாக அறிவிக்கப் பட்டவுடனேயே விடுக்கப்பட்டன.

* * * *

மோல்மீன் அருகே போர்

பிரிட்டிஷ் ராணுவ விமானப் படை அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

மோல்மீன் எல்லாப் பக்கங்களிலிருந்தும் பலமாகத் தாக்கப் பட்டது. எதிரிக்குப் பலத்த சேதம்.

பகலிலும் யுத்தம் நடந்தது. இப்பொழுது நமது துருப்புகள் ஸால்வீன் நதியைக் கடந்து பின் வாங்கிவிட்டன. மோல்மீனிலிருந்து ஸ்டோர்களையும் இதர சாதனங்களையும் அப்புறபடுத்தியாகிவிட்டது.

எதிரி காலாட்படைகளுக்கு உதவியாக ஏராளமான விமானங்கள் வேலை செய்தன. தாக்குதலெல்லாம் மார்த்தபானை நோக்கியே இருந்தது.

* * * *

மலேயா யுத்தம்

கடுமையான போராட்டத்திற்குப் பிறகு ஜப்பானியர் பாட்டு பகட் என்ற நகரை வசப்படுத்திக்கொண்டுவிட்டனர்; என்று யுத்த அறிக்கை கூறுகிறது.

* * * *

நியூ கினி தீவில் யுத்தம்

'நியூகினி தீவின் வடகரையிலுள்ள மடாங் நகரைப் பொது ஜனங்கள் காலி செய்துவிட்டனர் என்று ஆஸ்திரேலிய யுத்த மந்திரியான மிஸ்டர் போர்டு ஜனவரி மாதம் 26-ந் தேதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—இன்று 2 மணிக்கு வீவாக் என்ற நகரின்மீது ஜப்பானியர் வெடி குண்டுகளை வீசினர். புலேலோ என்ற விடத்துடன் திரும்பப் போக்குவரத்து ஏற்படும்படிச் செய்யப்பட்டு விட்டது.

ஸாலமன் தீவிலுள்ள டுலாகி என்ற நகரைப் பொது ஜனங்கள் காலி செய்துவிட்டனர்.

ஸாலமன் தீவிலுள்ள புக்கா வழியை ஜப்பானியர் வசப்படுத்திக்கொண்டுவிட்டார்கள்.

பிஸ்மார்க் தீவுக் கூட்டத்திலுள்ள கைதா என்றவிடத்தை ஜப்பானியர் வசப்படுத்திக் கொண்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

* * * *

பாலிக்பாபன் ஜப்பான் வசம்

டச்சு ராணுவ அறிக்கை கூறுவதாவது:—

ஜப்பானிய விமானங்களது வேலை சற்றும் குறையவில்லை. வெளி மாகாணங்களில் பாதுகாக்கப்படாத பல குடங்களில் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் பெருஞ் சேதமெதுவும் ஏற்படவில்லை.

தென்கிழக்கு போர்னியோவில் அங்குமிங்குமாக ஜப்பானிய விமானங்கள் குண்டுகளை வீசி யந்திர பீரங்கிப் பிரயோகஞ் செய்தன.

சுமத்ராவின் மேற்குக் கரையிலுள்ள எம்மாஹாவன் என்றவிடத்தின் மீது ஜப்பானிய விமானங்கள் கடுமையாகக் குண்டுகளை வீசின. இரு வியாபாரக் கப்பல்களில் தீப்பற்றியது மற்றொரு கப்பல் சேதப்பட்டது.

போர்னியோவிலுள்ள பாலிக்பாபனிலிருந்து செய்தி எதுவும் வரவில்லை. அங்கு பூரணமாக அழித்து எரிக்கப்பட்ட இடங்களை ஜப்பானியர் வசப்படுத்திக் கொண்டதாக அனுமானிக்க காரணமிருக்கிறது.

கெடார்ட்டிலிருந்து வந்த ரிப்போர்ட்டுகளிலிருந்து அங்கு எதிரிகள் பலமாக எதிர்க்கப்படுவதாகத் தெரிகிறது.

முதலில் ஜப்பானியர் செம்பாராவில் படையை இறக்கினர். அங்கு எதிர்ப்பு பலமாக இருந்தது. ஆனால் ரேடியோ சம்பந்தமில்லாதபடி செய்யப்பட்டு விட்டது. ஸ்தல நிலைமைபற்றி மேற்கொண்டு ரிபோர்ட்டுகள் வந்தால் தான் திட்டமாகத் தகவல் எதுவும் கூறமுடியும்.

அம்பானுக்கு அருகில் ஜப்பானிய விமானங்கள் மீண்டும் வேலை செய்ததால் சிலர் கொலையுண்டனர். சிலர் காயப்பட்டுப் போயினர்.

ஸரவாக்கின் தலைநகரான குசிங்கிற்கு அருகிலுள்ள விமானக்கூடத்தின் மீதும் கிடங்குகள் மீதும் டச்சுக் கடற்படை விமானங்கள் குண்டுகளை வீசின.

* * * *

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

'பிச்சைக்காரனாவது பதிலுக்குப் பால் கொடுத்தான்; உங்களுக்கு அதுவும் கிடைக்கப் போவதில்லை!' என்றாள் நளினி தேவி. என் அத்தையின் முகத்தில் தோன்றின சிரிப்பைக் கவனித்த நான், சரி ஏதோ சூக்ஷமம் இருக்கு!' என்று பேசாமல் இருந்தேன்.

'பிச்சைக்காரனாவது, பாலாவது? என்ன கதை?' என்றாள் என் அத்தை.

'நீங்கள் பேபரில் பார்க்கவில்லையா? ஒரு பிச்சைக்காரன் தனக்குப் பிச்சை போட்ட காசை உடனேயே பாலாக மாற்றி, சுவாமி உன் காசை ஏற்றுக் கொண்டு விட்டார் என்று பணம் பறித்தானாம். ஒரு அஞ்சு ரூபாய் நோட்டை இப்படி அமுக்கப் பார்த்து, வகையாக அகப்பட்டுக் கொண்டானாம். போலீஸ் பரிசோதனை போட்டபோது, நூற்று ஐம்பது ரூபாய்களுக்கு அவனிடம் பணம் இருந்ததாம்!' என்றாள். இதற்குள் எங்கள் வீட்டு வேலை செய்யும் தாயினுடைய பிள்ளை மாரிமுத்து, சாமான்களுடன் உள்ளே வந்தான்.

'நான் ஒன்றும் அப்படி உங்களாட்டம் யோசனை இல்லாமல் ஏமாற மாட்டேன். ஆள் தெரிந்து தான் கொடுப்பேன். இதோ பாரு, லேசாக, ஒன்றுக்குள் ஒன்று போடும்படியாக அடுக்கும், யானை மண்டையுமாக செட்டாகப் பொருக்கி இருக்கேன். பாம் விழும், திடீரென்று போக வேண்டி இருக்கும் என்றெல்லாம் சொல்லுகிறீர்களே! ஈயம் பூசின பாத்திரம்; அப்படியே என் புடவைப் பெட்டியில் வச்சு விடலாம். இந்த அஞ்சு பாத்திரத்தை வச்சுக் கொண்டு, ஒரு சமையல் பண்ணலாம்!' என்று என் அத்தை முகத்திலும், குரலிலும் வெற்றி தொனிக்கச் சொன்னாள். என் அத்தையின் யுக்தி எப்படி?

மையிட

கண் நீண்டு கறுத்துக் காட்ட மேல் இமையில் மை இட்டால் மட்டும் போதாது; இமையின் மேல் முதலில் ஏதாவது ஒரு கிரீமை லேசாகத் தடவ வேண்டும். முதலில் கொஞ்சம் கிரீமை ஆட்காட்டு விரலில் எடுத்து, கீழ் இருந்து மேல் நோக்கி இமையின் மேல் படும்படி தட்டித் தட்டி தடவ வேண்டும். இப்படியே மையையும் தீட்டி ரப்பையின் மேல்கசியும் மையை அப்படியே லேசாகத் தடவி, அதிகப்பட்டதை நாசூக்காகத் துடைக்கவேண்டும். கண்பெரிதாகவும் நீண்டும், பிரகாசமாகவும் காணும்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

தேன். சிந்தாமணி என் சிபார்சுகள் யாவற்றையும் முழு மனதுடன் ஆதரித்தார்: ஒரு சிறந்த பிரசங்கத்தையும் புரிந்தார்; இந்த இரண்டு தினங்களுக்கப்புறம் நான் சட்ட சபைக்குள் போகவில்லை.

அபிப்பிராய பேதம்

முதல் வட்டமேஜை மகாநாட்டில் அவர்வந்திருந்ததையும நான் அவசியம் குறிப்பிட வேண்டும். அங்கு அவர் சிறந்த பிரசங்கங்கள் சிலவற்றைப் புரிந்தார்: ராம்ஸே மக்டானல்ட் மஹாநாட்டில் தலைமை வகித்தது அவருக்குப் பிடிக்கவில்லை. என்பது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது! அங்கு அவருக்கும் எனக்கும் இரண்டு பிரச்னைகளில் அபிப்பிராய பேதம் தோன்றியது. முதலாவது மைனாரிட்டிகள் பிரச்னை. நான் மைனாரிட்டிகளுக்கு அதிக இடம் கொடுப்பதாக அவர் கருதினார் போலும்! இரண்டாவது இந்திய சமஸ்தானங்களைப் பற்றியது. இங்குகூட நான் சமஸ்தானங்களுக்கு அதிகம் விட்டுக் கொடுக்க விரும்புவதாக அவர் எண்ணினார் போலும்! நான் இந்தியாவுக்குத் திரும்பியபின், அவர் சமஷ்டியை சிறிது காலம் மிகவும் தாக்கினார். பின்பு சமஷ்டி விஷயத்தில் நான் செய்ததுதான் சரி என்று அவர் என்னிடம் ஒப்புக்கொண்டது அவரது மனோ தைர்யத்தைக் காட்டுகிறது. இத்தகைய பேதங்கள் எங்களுடைய சிநேகத்திற்கு எப்போதும் எதிராகியதில்லை: அவர் நீடித்த நோயால் வருந்திக் கொண்டிருந்தபோது நான் அவரது வீட்டிற்கு அடிக்கடி போய் வருவேன். அப்போது அவர் என்னிடம் பல விஷயங்களைப் பற்றி, தமது தேக நிலைமையையும் அலக்ஷியம் பண்ணியே பேசுவார். இது பார்ப்பவருக்கு பிரமிப்பூட்டும். அவரது மரணம் என்னை துக்க சாகரத்தில் வீழ்த்தியது. இந்த மாகாணத்தின் சரித்திரத்தை நிஷ்பக்ஷபதமாக எழுத முன் வருபவர், இளமைப்பருவத்தில் எங்களை எல்லாம் சேவையில் உத்சாகப்படுத்திய பண்டித மதன்மோஹன மாளவியாவுக்கு அடுத்த ஸ்தானத்தை அவருக்குத் தான் வழங்கவேண்டும். இந்த மாகாணம் அவருக்குத் தீராக்கடன் பட்டிருக்கிறது!

அவரது சாமர்த்தியம், கடமையில் அவர் காட்டிய கருத்து, அவரது புண்ணியமான பொது சேவை.—இவைதான் அவர் தமது சகாக்களுக்கும் இந்நாட்டாருக்கும் விட்டுச் சென்றிருக்கும் சொத்துகள்! (லக்ஷ்மணபுரி ரேடியோ மூலம் செய்யப்பட்ட பிரசங்கம்)

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு நன்கொடை யெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

ஆயுர்வேத வித்வான் B V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

I. D. L. 71.	I. D. L. 81.	I. D. L. 91.	I. D. L. 96.
மாதர்களுக்குகந்த டானிக்	சூதக கஷ்டங்களுக்கு டானிக்	பிரசவத்திற்குப்பிறகு உதவும் டானிக்	கர்ப்பிணிகளுக்கு டானிக்

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்யா Dr. P.S.C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

ரேடியோவின் சாக்ஷியம்

1

இரவு மணி எட்டுக்கு மேல் ஆய் விட்டதெனினும் வக்கீல் வரதப்பா தனது ஆபீஸ் அறையை விட்டு வரவில்லை. மறுநாள் நடைபெறவேண்டிய ஒரு பெரிய வியாஜ்ஜியத்தின் தஸ்தாவேஜுகளின் மீது அவர் மனம் ஈடுபட்டிருந்தது.

பக்கத்திலுள்ள ஹாலில் அவர் மனைவி மனோரமாவும் அவளது அத்தை மகன் அம்பலநாதனும் உரையாடிக்கொண்டிருந்தனர். மூலையில் புதிதாய் வைக்கப்பட்டிருந்த ரேடியோவிலிருந்து இனிமையான இசை ஒலித்துக்கொண்டிருந்தது. அந்த ரேடியோ அம்பலநாதனால் மனோரமாவுக்கும் அவளது கணவனுக்கும் அளிக்கப்பட்ட அன்பளிப்பேயாம். தனிமையாயிருக்கும் சமயங்களில் அது மனோரமாவுக்கு ஒரு பொழுதுபோக்கு சாதனமாக இருக்கும் என்பது அவனது கருத்து. தனது தொழிலிலேயே பெரிதும் ஈடுபட்ட வரதப்பாவுக்கு தனது மனைவியின் தேவைகளையும் சௌகரியங்களையும் கவனிக்கக் கூட அவகாசம் இல்லை என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

வரதப்பாவின் மீது யாதொரு வஞ்சனையும் இல்லை. அவர் மனோரமாவை முழுமனதுடன் காதலித்தார். எனினும் வக்கீல் தொழிலில் வெகு சீக்கிரத்தில் பிராபல்யம் அடைந்த அவர் சாப்பிடும்நேரத்தையும் தூங்கும் நேரத்தையும் தவிர மற்றபொழுதெல்லாம் தனது கக்ஷிக்காரர்களுடனும், அவர்களது நம்பர் கட்டுக்களுடனும் கழிக்கவேண்டியதாயிற்று. அதனால் அவர் தனது மனைவியுடன் அதிகமாய் சல்லாபிக்க இயலவில்லை.

அம்பலநாதன் மனோரமாவுக்கு நெருங்கிய உறவினன். சிறு வயது முதல் அவளுடன் பழகினவன். அவளை மணக்க வேண்டியவன். ஏதோ ஒரு அசந்தர்ப்பத்தால் அவன் அவளுக்கு மாலையிடவில்லை. அவள் வரதப்பாவின் மனைவியானாள். எனினும் அவளை அவன் தனது நாயகியாகவே கருதினான். கேஸ் கட்டுகளிலேயே மூளையைச் செலுத்திய அவள் கணவன் அவளைப் புறக்கணித்ததாகவே அவன் கருதினான். அதனால் தனக்கு ஏற்பட்ட சௌகரியத்தைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணினான்.

அடிக்கடி அவன் வரதப்பாவின் வீட்டுக்கு வரலானான். மனோரமா ஒரு கோஷா ஸ்திரீ யல்லவே! அவனது மாமன் மகள் தானே! அவளுடன் நெருங்கிப் பழகுவதும் பேசுவதும் அவனுக்கு எளிதேயன்றி வேறல்ல. வெகு சீக்கிரத்தில் அவள் அவனுக்கு வசியமாகி விட்டாள். அவனது வஞ்சகப் பேச்சும் வாஞ்சை ததும்பிய நோக்கும் அவளது உள்ளத்தை கவர்ந்து விட்டன. அவனுக்கு ஆசை நாயகியாவதில் அவளுக்கு உண்டான ஆனந்தத்துக்கு ஒரு எல்லையில்லை.

வரதப்பா பெண்குலத்தின் மீது பெருமதிப்பு வைப்பவர். தனது மனைவியை ஒரு தூய தேவதை என்று கருதுபவர். கள்ளங்கபடமற்ற அவருக்கு மனோரமாவின் நடத்தையின் மீது எவ்விதமான சந்தேகமும் தோன்றவில்லை. அம்பல நாதன் வருவதில் அவருக்கு பரம சந்தோஷமே ஏற்பட்டது. தனிமையில் இருந்த தனது மனைவியுடன் பொழுது போக்குவதற்கு ஏற்ற புருஷன் அவன் என்று கருதினார். அதன் பொருட்டு அவர் அம்பல நாதனிடம் நன்றியுடையவராய் இருந்தார். தனது மனைவி தனக்கு துரோகம் செய்வாள் என்ற நினைவு அவருக்குக் கனவிலும் இல்லை. தனது நண்பனும் உறவினனுமான அம்பலநாதன் தன்னை வஞ்சிப்பான் என்ற சந்தேகம் அவருக்குச் சிறிதும் இல்லை.

நாட்கள் சென்றன. கள்ளக் காதலர்களது தீய நட்பு வளர் பிறை போல் வளர்ந்தது. அம்பல நாதன்மனோரமாவை காட்சிச் சாலைகளுக்கும் நாடகசாலைகளுக்கும் சினிமாக்களுக்கும் அழைத்துச் செல்லுவான். உல்லாஸமாய்ப் பொழுது போக்க சிறிதும் அவகாசமில்லாத வரதப்பாவுக்கு தனது மனைவிக்கு அம்பலநாதன் துணைவனாய் அமைந்ததில் பூர்ண திருப்தியே. சில சமயங்களில் அம்பலநாதன் வீட்டுக்கு வராவிட்டால் அவனுக்கு சொல்லி யனுப்புவார். "இன்று சினிமாவுக்கு நீ மனோரமாவை அழைத்துச் செல்ல வேண்டும். ஐந்து மணிக்கு என் மோட்டாரை அனுப்புவேன். தயாராய் இரு"-இவை போன்ற கடிதங்கள் வரதப்பாவிடமிருந்து அம்பலநாதனுக்கு வரும். அதற்கு அவனுக்கு என்ன ஆக்ஷேபணை இருக்கக்கூடும்? கரும்பு தின்ன கூலியா வேண்டும்?

2

கேஸ் கட்டில் தனது புத்தியைச் செலுத்திய வரதப்பாவிடம் வந்த அம்பலநாதன், "நான் நேராய் ரயிலுக்குப் போக வேண்டும். அயலூர் பிரயாணம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. போய்விட்டு இன்னும் 2 நாட்களில் வருகிறேன்" என்றான்.

"அடடா! இன்று ராயல் தியேட்டரில் கோவலன் நாடகம் ஆயிற்றே? சினிமாக் குயில் சௌந்தரவல்லியும் கலியுக மன்மத கல்யாண பாகவதரும் நடிக்கப் போகிறார்களாம். நீ கட்டாயம் மனோரமாவை அழைத்துப் போவாய் என்று நினைத்திருந்தேனே!" என்றார் வரதப்பா.

"என்ன பண்ணுவது? என் பிரயாணத்தை நிறுத்த முடியாதே! நீ தான் மனோரமாவை அழைத்துப் போயேன்" என்று கூறி நிறுத்தினான் அம்பலநாதன்.

மனோரமா முகத்தைச் சுளித்துக் கொண்டே, "எங்கே அவர் மட்டும் கிளம்பட்டும், நான் ஆயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறேன். கேஸ் கட்டை விட்டு பிரிய அவருக்கு மனம் வருமா?" என்றாள்.

வரதப்பா பரிதாபகரமான நோக்குடன் "கோபித்துக் கொள்ளாதே மனோ! என்ன பண்ணுவது? என் தொழில் அவ்வளவு பொல்லாததாய் இருக்கிறதே. நல்லது அம்பலநாதன் வராவிட்டால் என்ன? நீ மட்டும் போகலாம். மோட்டார் தயாராய் இருக்கிறது" என்றார்.

அம்பலநாதன் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான். அவன் செல்லுமுன் வரதப்பா அவனை நன்றியறிதலுடன் நோக்கி, "நீ பரிசாக அளித்த ரேடியோ மிகவும் நன்றாய் இருக்கிறது. மனோரமாவின் வந்தனத்துடன் எனது வந்தனத்தையும் பெற்றுக்கொள்" என்றார்.

சிறு கதை

★

"நியாயவாதி" எழுதியது

காலையில் எழுந்தவுடன்

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுரு சுருப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டால் வெளியிடப்பட்டது

IK 156

மத்திய கிழ்த்திசை மந்திரி

மத்திய கிழ்த்திசை மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் கேஸி பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மிஸ்டர் சர்ச்சிலைப்பேட்டி கண்டார். ஸர் கிங்ஸ்லீ வுட், மிஸ்டர் கேஸி, மிஸ்டர்சர்ச்சில் நிற்பதை படத்தில் பார்க்கலாம்.

3

மூறு நாள் காலை ஏழு மணிக்கு வரதப்பா ஹாலில் உட்கார்ந்திருந்தார். மனோரமா அப்பொழுது அவருக்கு காப்பி கொண்டுவந்தாள். அதை ருசி பார்த்துக்கொண்டே அவர், "மனோ! நேற்று ராத்திரி நாடகம் பார்க்கப் போயிருந்தாயே! எப்படி இருந்தது?" என்று வினவினர்.

"முதல்தரமாய் இருந்தது. சௌந்திரவல்லியின் பாட்டு மிகவும் இனிமையாக இருந்தது. கல்யாண பாகவதர் கல்யாண புருஷர் மாதிரியே இருந்தார். அவரது நடிப்போ அபாரம்" என்றாள்.

வரதப்பா, "ராத்திரி எல்லாம் இந்த கேஸ் கட்டை வைத்து அழுதுகொண்டிருந்தேன். இன்னும் முடியவில்லை. பார்க்க வேண்டியது பாக்கியிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே தன் மனைவியின் முகத்தைப் பார்த்தார்.

"என்ன சம்பாதித்தும் என்ன? உங்களுக்கு சுகம் இல்லை. ஓய்வு இல்லை" என்று மனோரமா சற்று அனுதாபத்துடன் கூறினாள்.

சற்று முன்பு தான் அவள் ரேடியோவை முடுக்கி வைத்தாள். அதில் த்வனித்த ஆரம்ப சங்கீதம் முடிந்த பின், பின் வருமாறு ஒலித்தது:—

"இது காலை செய்தி அறிக்கை. நேற்று இரவு சுமார் பதினொரு மணிக்கு ராயல் தியேட்டரில் கோரமான தீ விபத்து ஏற்பட்டது. கொட்டகையில் கோவலன் நாடகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏராளமான கூட்டம், திடீரென்று தீப்பற்றிக்கொண்டு நாலு பக்கங்களிலும் பரவலாயிற்று. அப்பொழுது காற்று வேகமாய் அடித்துக்கொண்டிருந்தபடியால் தீயின் வேகமும் உக்ரமும் அதிகரித்தது. தீயணைக்கும் யந்திரங்கள் உடனே தருவிக்கப்பட்டன. என்ன முயன்றும் தீயை அவிக்க முடியவில்லை. கொட்டகை முழுவதும் சாம்பலாயிற்று. நாடக மேடை மீது தோன்றிய நடிகர்கள் ஒருவரும் தப்பவில்லை. சினிமாக் குயில் சௌந்தரவல்லியும் ராஜ பார்ட் கல்யாண பாகவதரும் தீக்கிரையாயினர். கொட்டகையிலிருந்த ஜனங்களில் பெரும்பாலர் நெருப்பில் அகப்பட்டுக்கொண்டனர். அவர்களில் எத்தனை பேர் இறந்தனர், எத்தனை பேர் பிழைத்துள்ளனர் என்பதைப்பற்றி இப்பொழுது சரியான விவரங்கள் கூற முடியாது. நகரம் எங்கும் ஒரே அல்லோலகல்லோலமாய் இருக்கிறது. போலீசாருக்கும் ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்களுக்கும் ஓயாத வேலை. விபத்தைப்பற்றி ஸர்க்கார் அதிகாரிகள் விசாரணை செய்துகொண்டிருக்கின்றனர்."

மேற் கூறப்பட்ட செய்தியை கணவனும் மனைவியும் மௌனமாகச் செவியுற்றனர். மனோரமாவின் முகத்தில் தோன்றிய வெறுப்பை எப்படி விவரிப்பது? அவள் கண்களில் தென்பட்ட மருட்சியையும் அவளது உடம்பில் தென்பட்ட நடுக்கத்தையும் என்னென்று கூறுவது?

கற்சிலை போல் அசைவற்றிருந்த அவள் கணவன் அவளை சுட்டெறிப்பவர்போல் நோக்கினர். சற்று நேரம் அவர் ஒன்றும் பேசவில்லை. சுய உணர்வை மீட்பதற்கு அவருக்கு சிறிது நேரம் பிடித்தது. நடுங்கிய குரலில் அவர், அவளை விளித்து "உண்மையைச் சொல்லிவிடு. நேற்றிரவு நீ நாடகத்துக்குப் போகவில்லை. எங்கே போயிருந்தாய்?" என்றார்.

மனோரமா சொப்னவஸ்தையில் பேசுபவள் போல், "இந்திரபவன ஹோட்டலிலுள்ள சயன அறைக்குப் போனேன்" என்றாள்.

"அங்கே இருந்தது யார்?"

"என் அத்தான் அம்பலநாதன்"

"பகவானே! இதுவும் உன் சித்தமா? அப்படியாயின் சரி, என் கிரகஸ்தாஸ்ரமம் இன்றுடன் முடிந்து விட்டது" என்று சொல்லிக் கொண்டே வரதப்பர் தனது அறைக்குச் சென்றார். தனது குறிப்புப்புஸ்தகத்தில் பின் வரும் கம்பராமாயணச் செய்யுளை எழுதினார்.

"தூமகேது புவிக்கெனத்
தோன்றிய
வாம மேகலை மங்கையரால்
வரும்
காம மில்லை எனில்
கருங்கே டுடனும்
நாமமில்லை நரகமுமில்லை"

தனது வீட்டையும் வாழ்வையும் துறந்து விட்டுச் சென்ற வரதப்பாவை யாரும் பார்க்கவில்லை. அவர் எங்கு சென்றார். என்ன கதிக்குள்ளானார் என்பதைப் பற்றி உண்மையான விவரம் நாளது வரையில கிடையாது.

இப்படி கள்ளக் காதலனால் பரிசளிக்கப்பட்ட ரேடியோ அவனுக்கும் விரோதமாய்சாக்ஷியம் கூறி அவனது ஆசை நாயகியின் துரோகத்தை அவளது கணவனுக்கு காட்டிக்கொடுத்து விட்டது.

மனச்சாந்தியும் மனிதரின் ஆரோக்கியமும்

★

நோயற்ற வாழ்வு

★

வைத்யரத்ன ஏம். துரைசாமி அய்யங்கார்

மனிதருடைய மனோதர்மங்கள் அவரது ஆரோக்கிய நிலைமைக்கும் அநாரோக்கிய நிலைமைக்கும் பெரிதும் ஆதாரமாகின்றன. இவ்வுண்மையையே

सच्वाधिका मनोधर्मा ये च राज सतामसाः ।
सीरोगताया रोगाणां तान् हेंदून् क्रमशो विदुः ॥

என்கிற காச்யப ஸம்ஹிதா வசனம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மனித வர்க்கத்திற்கு உபதேசித்திருக்கிறது. கடுங் கோபத்தினாலும் அஹங்கார மமகாரங்களாலும் மனிதனுடைய குணமும், அவனுடைய ஆரோக்கியமும் அலங்கோலத் தன்மையை அடைவது இயல்பு என்பதையும், மன ஆமைதியினாலும் சாந்த ஸ்வபாவத்தினாலும் ஆயுளாரோக்கியங்கள் விருத்தியாகின்றன வென்பதையும், பிராசீன-நவீன பிரமாணங்களைக்கொண்டு இக் கட்டுரையில் விளக்கிக் காட்ட விரும்புகிறேன்.

முக விகாரங்கள்

ஆண்களும் பெண்களும் மனக்களிப்பை விளக்கும் முக விலாஸத்தினாலும் பொருமையில்லாத் தன்மையினாலும் தேஹாரோக்கிய நிலைமையில் மேன்மையடைவது போலவே, சினத்தைக் குறிக்கும் வெடுவெடுப்பான முகத் தோற்றத்தாலும், சுய நலமிகளுக்கு இயல்பான பொருமையினாலும் பொய் பேசி வஞ்சனை செய்யும் சுபாவத்தினாலும், உடற்கூறின் உயரிய சுகாதாரத் தன்மை சீக்கிரத்திலோ காலவளவிலோ சீரழிவதும் இயல்பு என்று முற்காலத்திய ஆயுர்வேத சாஸ்திரமும், இக்காலத்திய நவீன ஆராய்ச்சி முறையும் ஒருங்கே நமக்கு அறிவிக்கின்றன. கடுஞ்சினம், பொருமை, அஸூயை, விச்வாசமின்மை, கபடத் தன்மை, த்வேஷம் ஆகிய இவையெல்லாம் வாத ரோகங்களை அல்லது நரம்பு மூளைகள் ஸம்பந்தமான வியாதிகளை விளைவிக்க மூல காரணங்களாகவோ, துணைக் காரணங்களாகவோ ஆகின்றன. ஒருவன் மற்றவர் மீது தன் அஸூயை அல்லது த்வேஷத்தைக் காட்டும் போது மனோ நிலைமையில்-மூளைக்குள்-கிளர்ச்சியும் ஆவேகமும் தோன்றி ரத்தக் கொதிப்பு உண்டாய், முகத் தோற்றத்தில் வெடுவெடுப்பும் வேறு விகாரங்களும் கண்டு முழுநாடி நரம்புகளின் இயற்கை ஒத்துழைப்புக்குக் குழப்பமும் தடையும் ஏற்படுகின்றன; அச்சமயம் பலருக்கு உடலெங்கும் நடுக்கமும் மயிர்ச்சிலிர்க்கையும் காண்பதை நாம் அனுபவத்தில் காண்கிறோம், அவ்வுணர்ச்சிக் குறிகள் உடனே முகத்தின் தசைநார்களில் தோன்றி, அத்தசைநார்கள் முறுக்கப்பட்டு முகம் விகாரமடைய அம்மனிதனுடைய தோற்றத்தில் அருவருக்கக்கூடிய மாறுபாடும் காணப்படும். இக் கடுஞ் சினம் முதலிய கடோர குணங்கள் வாதவஹ ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற நாடி நரம்புகளின் மூலம், மனோவஹ நாடிகளின் மூலம், உடலில் பரவும் போது, அந்த நரம்பு மண்டலத்திற்கு அழற்சியைத் தந்து தேகாரோக்கியத்தை ஒழுங்கீன மாக்குகின்றது. இக்குணமுள்ளவர்களுக்குப் பசியும் ஜீர்ண சக்தியும்—அவ்வித நரம்பு மண்டலங்களின் மூலமாய்—தடைப்பட்டு, யக்ருத் என்கிற கல்லீரலின் செயலும் கலவரமடைகின்றது.

மன அமைதியின்மை

"பொருமையை வென்று, பொருமையே பெருமை தருமென்பதை யுணர்ந்து, பேராசை, பகைமை, அஸூயை இவற்றையும் ஒழித்துச் சாந்தமாய் வாழ்பவனே ஆரோக்கியத்தையும் ஆயுளபிவ்ருத்தியையும் பெற்றுச் சுகித்திருப்பான்" என்று சரகாதி பண்டைக் காலத்திய சாஸ்திரக்

ஞர்கள் மனோ தர்மத்திற்கும் ஆரோக்கியத்திற்குமுள்ள ஸம்பந்தங்களை விளக்கியிருக்கிறார்கள். வழக்கமாகவே நீடித்து பகைமையும் அஸூயையும் மனதிற் குடிகொண்ட பேர்வழிகள் உண்மையில் சுகம் பெறுவதில்லை; அவர்களுக்கு ஆரோக்கியம் நிலைத்திருப்பது அரிது. அவர்களுடைய உணர்ச்சி நரம்புகள் யாவும் (சேத நாதாதுக்கள்) எப்பொழுதுமே படபடத்து அதிர்ச்சியடைந்துகொண்டும் ஒழுங்கீனமான கிளர்ச்சியடைந்தவாறும் இசைந்து வரும். ஒரு ஜாதியினர் மற்ற ஜாதியினரை இகழ்ந்து வெறுக்கின்றனர். குடியானவன் தன் நிலம் நன்கு விளைவதில்லையேயென்றும், கால மழையில்லாமல் கழனிகள் பயிரின்றி பாழாகி விடுகின்றனவேயென்றும் பலவாறு மனவமைதியின்றி வருந்துகிறான்: வியாபாரம் விருத்தியாகவில்லையென்றும் லாபம் போதியவளவு கிடைக்கவில்லையே என்றும் வர்த்தகன் வேதனையுறுகிறான். தொழிலாளர் தமது ஊழியத்திற்கு உதவியில்லையேயென்றும், உழைப்பிற்குப் போதிய ஊதியம் இல்லையே என்றும் உள்ளம் வருந்தி வாடுகிறார்கள். இவ்வித மனோவேதனையெல்லாம் கள்ளங் கபடற்ற உள்ளமாகிற பாலில் சிறு காடித் துளிகள் போல் படிந்து அதைப் புளிக்கச் செய்து அழற்சியடையச் செய்வது இயல்பு. இந்நிலைமை யேற்படுவதால் மூளையின் சுறுசுறுப்பு மிகச் சீரழிவதோடு, இரப்பையென்றும் ஆமாசய வேலைக்கும் இடையூறு ஏற்பட்டு நாளடைவில் பசியும் ஜீர்ண சக்தியும் ஒழுங்கீனமடையும்.

மனோ நிலை கெடுவது

கடுங்கோபக்காரனை புருஷனால் அவனது சாந்த குணமுள்ள மனைவியும், சினங்கொள்ளும் சுபாவமுள்ள மனைவியால் அவளது புருஷனும் குடும்ப நிர்வாகத்தில் பலவகைப் பிரதிகூலங்களைப் பெறுவதோடு அவ்விருவருடைய ஆரோக்கியமும் அலங்கோல ஸ்திதியை அடைவதோடு, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுடைய தேகாரோக்கியமும் மனோ நிலைமையும் புத்தி கூர்மையும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்பதைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். பல குழந்தைகள் இயற்கையிலேயே நரம்பு மண்டலத் தளர்ச்சியோடும், கல்லீரல் என்னும் யக்ருத்தின் கோளாறோடும், மந்த மதி யென்னும் மூளைக் கோளாறோடும் வேறு பல தேக மனோ விகாரங்களோடும் பிறந்தே வருந்துவதற்கு, அவர்களுடைய மாதா பிதாக்களின் விரும்பத்தகாத மனோ தர்மங்களே முக்கிய காரணமென்பதை மேனாட்டு ஆராய்ச்சி வல்லோரும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். கோள் சொல்லுங் குணமுடையவரும், கொடுஞ் சொற்களைக் கூறி பிறர் மனதைப் புண்படுத்தும் சுபாவமுடையவரும், கடுஞ் சினக்காரரைப் போலவே நரம்பு மண்டலச் சோர்வுக்கும் அதனால் வாத வியாதிகளுக்கும் எளிதில் ஆளாகின்றனர். "கடுஞ்சினத்திற்கும் அஸூயைக்கும் நிதி போன்ற மனமுள்ளவரும், சீறிய ஸர்ப்பம் போல் சீறி விழுந்து பொல்லாச் சொற்களால் பிறரை அடிக்கடியும் வருந்தச் செய்யும் துர்க்குணமுள்ளவரும் தம் இள வயது நீங்குவதற்கு முன்பே நரம்பு மண்டலக் கிளர்ச்சியின் காரணமாய் தேக-மனோ நிலைமைகளில் பலவித விகாரங்களைப் பெற்று நித்திரையின்மையினாலும், வாயு ரோகங்களாலும் வருந்த நேரிடுவதாகப் பல பரிசோதனைகளால் அறிந்திருக்கிறோம்" என்று டாக்டர் புட் என்பவர் 'பிரிவென்ஷன் ஆப் டிஸீஸ்' என்னும் நூலில் கூறுகிறார். இவர்களுடைய தேகத்தில் பித்தமும் அதிகரித்து விடுகின்றது. இவர்களுடைய நாக்கும், பற்களும், சிறு நீரும் மஞ்சள் நிறமடைவதுண்டு, இக் குணமுடைய ஸ்த்ரீகளுக்கு ஹிஸ்டீரியா என்கிற பூதோ ஸ்மாத ரோகமும், புருஷருக்கு சித்த ப்ரமை போன்ற மனோ விகாரமும் காணலாம். அஸூயையும் அஹங்காரமும் உள்ள மனிதர் அநேகமாய் விஷய விமர்சனம் செய்யச் சக்தியற்று மனக் குழப்பமடைந்திருப்பர்; அவர்கள் விநயமறியாமல் தெறிக்கத் தெறிக்கப் பேசி விஷமமான வார்த்தைகளால் மேன்மக்களையும் மனங்கலங்கச் செய்வர்; அவர்களுக்கு நரம்பு மண்டலம் படபடத்து நடுக்க முறும்; மனவமைதியின்றி நல்ல நித்திரையின்றி அன்னார் வன்னெஞ்சத்தின் பலனாகத் தாமும் வருந்த நேரிடும். "அமெரிக்காவில் யுனைடட் ஸ்டேட்ஸ் காங்கிரஸின் முதல் பிரஸிடெண்டாயிருந்து, அந்நாட்டு ஸேனைத் தலைவராகவும் இருந்த ஜார்ஜ் வாஷிங்டன் என்னும் மஹா பிரஸித்தி பெற்ற அமெரிக்கா தேசத்துத் தலைவர் அறிவின் மேன்மையும், புத்தி கூர்மையும், விசால நோக்கமும், வீரச் செயல் புரியும் தீரத்தன்மையும், எளியோரைக் கண்டு இரங்கும் கருணையும், பெரியோரைக்கண்டும்பெரியோரைக் கண்டு வணங்கும் தன்மையும், படாடோபமற்றப் பழக்க வழக்கமும் உள்ளவராயிருந்து, கோபத்தை வென்று அகங்காரமொழிந்து, பெருந்தன்மையுடன் விளங்கியதாலேயே அவர் எக் காரியத்தையும் பிழையறச் செய்யும் வல்லமை வாய்ந்து, திடகாத்திரம் படைத்து அமைதியுடன் வாழ்ந்து வர முடிந்தது" என்று அவரைப் பற்றி ஆர்டிமஸ் வார்டு என்பவர் புகழ்ந்து கூறியிருக்கிறார். மனக் கொதிப்பும் அஸூயையும் உள்ள மனிதர்களும் அவர்களுடன் மிகுதியாகப் பழகி வருபவரும், தேக மனோ நிலைமைகளில் பெரும்பாலும் சுகம் பெற்று அமைதியுடன் உலக வாழ்க்கையில் ஈடுபடுவது அசாத்தியமென்று அநேக ஆராய்ச்சிக்காரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

உபயோகமாக வாழ்தல்

சிலேஷ்மப் பிரக்ருதியாயிருப்பவர் இயற்கையிலேயே சாந்தகுண முள்ளவராயிருப்பர். வாதப் பிரக்ருதியும், முக்கியமாகப் பித்தப் பிரக்ருதியும் கோபம், பொருமை முதலிய துர்க் குணங்களுக்கு இருப்பிடமாயிருந்து வாத நோய்களுக்கும், ரத்த தோஷங்களுக்கும். பித்த விகாரங்களுக்கும் ஆளாகிறார்கள். இவர்கள் மிகவும் சுய நலமிகளாகவும், ஆரோக்கியக் குறைவினால் வருந்துபவராகவும் பொது ஜனங்களுக்கும் பந்து மித்திரர்களுக்கும் உபயோகமற்றவராகவும், பல சமயங்களில் தீங்கு செய்பவராகவும் இருக்கின்றனர். இவ்வகைத் தீய குணமுள்ளவர் தெய்வாதீனமாய் மேன்மக்களுடைய பழக்க வழக்கங்களைப் பெற்று வாழக்கூடிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு, வாத பித்த தோஷங்களின் கடுங் குணங்களைத் தணிக்கும் சிறந்த ரஸாயனங்களை அதிருஷ்டவசமாய் நீடித்து உபயோகித்துவர் நேரிட்டு, துர்ஜன ஸஹவாஸத்திற்கு இணங்க முடியாதபடி ஸந்தர்ப்பங்களும் சம்பவித்தால், தமது கடுங் கோபம் முதலிய துர்க்குணங்கள் மறைந்து, மனோ தேஹ நிலைமையில் சுகம் பெற்று, மானிட வர்க்கத்திற்கும் தமக்கும் உபயோகமுள்ள உயிர் வாழ்க்கையைப்பெறலாம்.

அவளைப் பாதுகாக்க வேண்டும்
—அழுக்கிலிருந்து

அழுக்கிலுள்ள அபாயத்திலிருந்து
காக்கக் கூடிய லைப்பாய்
முறையை அவளுக்குப் போதியுங்கள்

அழுக்கைப்பற்றி ஏதோ சற்று சிரத்தைக் குறைவினால் அவளுக்குத் தீங்கு நேரவேண்டுமென்றால் என்ன பரிதாபம்! அவளை அழுக்கிலிருந்து உங்களால் நிச்சயமாக விலக்க முடியாது—ஆனால் அதனுடைய அபாயங்களிலிருந்து லைப்பாய் மூலம் அவளைப் பாதுகாக்க முடியும்.

பாருங்கோ, அழுக்கிலிருந்து கிருமிகள் உண்டாகின்றன. அநேக வியாதிகளுக்குக் காரணம் அழுக்கிலுள்ள கிருமிகள்தான். ஆனால் கிருமி நாசன லைப்பாய் ஸோப் ஆரோக்யத்தைப் பாதுகாக்கக் கூடிய தனது அதிசயமான நுரையினால், இந்த அபாயத்திலிருந்து தப்பச் செய்கிறது. நீங்கள் அவளை அழுக்கிலிருந்து எப்பொழுதும் பத்திரமாகக் காத்துக்கொள்ள வேண்டுமானால், அவளுக்கு இந்த லைப்பாய் ஆரோக்ய முறையைக் கற்றுக் கொடுங்கள்—சாப்பாட்டிற்குமுன்பும், விளையாட்டிற்குப்பிறகும் தினசரி முறை தவறாமல் லைப்பாயினால் சுத்தி செய்ய வேண்டும். பிறகு நீங்கள் கவலைப் படவேண்டிய அவஸ்யமில்லை.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது



லைப்பாய்



அது ஒரு நல்ல வழக்கம்

தேர்தல்

ப்ரேம் சந்த்
எழுதியது

தேவகட் ஸமஸ்தான திவான் ஸர்தார் ஸுஜன் ஸிங் கிழப்பருவம் அடைந்ததும் கடவுளை நினைத்தார். அரசனை அணுகி வேண்டிக்கொண்டார்—'தீனபந்தோ: அடியவன் நாற்பது ஆண்டுகளாக தங்கள் சேவையிலேயே காலம் செலுத்தினேன். இனிச் சில நாளாவது ஆண்டவனுக்குத் தொண்டு புரிய விரும்புகிறேன். எனக்கு வயதும் ஆகிவிட்டது. ராஜாங்க விஷயங்களைக் கவனிக்கப் போதிய உடல் வலியும் இல்லை. எதாவது தவறு செய்து விட்டால் நான் இத்தனை நாளாய் காப்பாற்றி வந்த என் நல்ல பெயரும் போய் களங்கமும் ஏற்பட்டுவிடும்.' என்று.

அரசன் அறிவும் ஆற்றலும் படைத்த அமைச்சரிடம் அளவற்ற மதிப்பு வைத்திருந்தார். எவ்வளவோ சொல்லியும் திவான் தன் பதவியை வகிக்க மறுக்கவே கடைசியில் ஒரு நிபந்தனையின் பேரில் அரசர் திவான் வேண்டுகோளை ஒப்புக்கொண்டார். புது திவானை ஸர்தார் ஸுஜன் ஸிங்கே தேட வேண்டும் என்பது தான் நிபந்தனை.

மறுநாள் தேசத்துப் பெரிய பத்திரிகைகளில் கீழ்க்காணும் விளம்பரம் அச்சிடப்பட்டது—"தேவகட் ஸமஸ்தானத்துக்குத் தகுந்த திவான் தேவை. யார் தம்மை இப்பதவிக்குத் தகுந்தவர்களாக எண்ணிக்கொள்கிறார்களோ அவர்கள் தற்சமயம் திவானாயிருக்கும் ஸர்தார் ஸுஜன் ஸிங்கிடம் நேரில் விண்ணப்பித்துக்கொள்ளவும். அவர்கள் பட்ட தாரிகளாயிருக்க வேண்டும் என்ற தேவையில்லை. ஆனால் நல்ல திட சரீரமுடையவராயிருக்க வேண்டும். அஜீர்ணத்தில் அவதிப்படுகிறவர்கள் விண்ணப்பித்துக்கொள்ள அவசியமில்லை. ஒரு மாதம் வரை மனுதார்களுடைய பழக்க வழக்கங்கள், நடத்தை யாவையும் கவனிக்கப்படும். கல்வியறிவிற்குக் குறைவாகவும் கடமையுணர்ச்சிக்கு அதிகமாகவும் மதிப்பு வைக்கப்படும். இந்த மாதிரி தேர்தலில் வெற்றி பெற்றவர் திவானாக நியமிக்கப்படுவார்"

இந்த விளம்பரத்தினால் தேசம் முழுவதிலும் குழப்பம் ஆகி விட்டது. உயர்ந்த பதவி, பட்டம், பணம் முதலிய ஒருவிதமான நிபந்தனையும் இல்லாமல் கிடைத்து விடும் என்றால் கிடைக்கிறவன் கொடுத்து வைத்தவன் தான். நூற்றுக்கணக்கான ஜனங்கள் பாக்கியத்தைப் பரீக்ஷிக்கப் புறப்பட்டார்கள். தேவகட்டில் புதுப்புது மனிதர் வரலாயினர். ஒவ்வொரு வண்டியிலிருந்தும் மனுதாரர் கூட்டம் ஒன்று இறங்கும். ஒருவர் பஞ்சாபிலிருந்து வருவார்: இன்னொருவர் சென்னையிலிருந்து வருவார்: ஒருவர் பழைய காலத்து எளிய வாழ்க்கையை விரும்புகிறவர். ஆனால் இன்னொருவர் புதுமைப் பித்தராயிருப்பார். பண்டிதர்களும் மௌல்விகளும் கூட வந்தார்கள். வேறிடங்களுக்கென்றால் ஸர்வ கலாசாலை 'டிக்ரி' வேண்டும். இங்கேதான் அந்த நிபந்தனை இல்லையே! விதவிதமான தொப்பிகளும் தலைப்பாகைகளும் அங்கே காணப்பட்டன. ஆனாலும் அங்கு பீ. ஏ-க்கள் தான் அதிகம். ஏனென்றால் பட்டம் தேவையில்லாதபோதிலும் அதற்கு ஒரு தனி மதிப்பு இருக்கத்தான் இருக்கும் அல்லவா?

ஸர்தார் ஸுஜன் சிங் இவர்களுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்திருந்தார். எல்லோரும் தங்கள் அறைகளில் உட்கார்ந்து கொண்டு, ரம்ஸான் பண்டிகைக்கு முன் நாட்கள் எண்ணி விரதம் இருக்கும் முஸல்மான்களைப் போல் நாட்களை எண்ணினார்கள், ஒவ்வொருவரும் தம் புத்திக்கெட்டியபடி தத்தம் வாழ்க்கையைச் சிறப்பித்துக்கூற முயன்றார். காலையில் ஒன்பது மணிக்குமுன் தூக்கத்திலிருந்து எழுந்து பழக்கமில்லாத பேர்வழி அதிகாலையில் தோட்டத்தில் நின்று உஷாதேவியை வணங்கலானார். ஹுக்கா குடித்துப் பழக்கமுள்ள ஒருவர் இப்பொழுதெல்லாம் இரவில் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு தான் சிகரெட் பிடித்து வந்தார். சிலர் தம் வீட்டு வேலையாட்களை அதட்டிப் பழக்கமுள்ளவர்கள். இங்கேயோ "தாங்கள்" போடாமல் வேலையாட்களைக்கூட அழைப்பது கிடையாது, ஒருவர் நாஸ்திகர்:'ஹக்ஸ்லீ' உபாஸகர்: ஆனால் இப்பொழுதெல்லாம் அவர் மதப்பற்றைப் பார்த்துக் கோயில் பூசாரி கட்ட தன் வேலை போய் விடுமோ என்று அஞ்சவேண்டியதாயிற்று. இன்னொருவருக்குப் புத்தகங்களைக் கண்டாலே ஆகாது: ஆனால் தற்காலத்தில் அவர் பெரிய பெரிய மதப் புத்தகங்களும் கையுமாகக் காணப்பட்டார். யாரிடமாவது பேசிப்பாருங்கள், அவர்கள் வணக்கமும் வினயமும் உருவெடுத்தாற்போல் காணப்பட்டார்கள். சர்மா அவர்களுக்கு வேத புத்தகங்கள் படிக்கவே நேரம் காணவில்லை. மௌல்வி அவர்களோ நமாஸிலேயே மூழ்கிக்கிடந்தனர். ஒரு மாதத்திற்கு இந்தக் கஷ்டம்: காரியம் மட்டும் கைகூடிவிட்டால் அப்புறம் எப்படியிருந்தால் தான் யார் கேட்கப் போகிறார்கள்?

ஆனால் மனிதரை நிறையிட்டு மதிப்பு பார்க்கும் கணக்கன் ஒருவன் இந்தக் கொக்குக்கள் மத்தியில் அன்னப்பறவை எங்கே இருக்கிறதென்று: தேடிக்கொண்டுதான் இருந்தான்.

2

புதுமையில் மோகம் கொண்ட ஒரு கூட்டத்தினர் ஒரு நாள் 'ஹாக்கி' விளையாட எண்ணினர். இதுவும் ஒரு வித்தை தானே. கைத்திறமையால் காரியம் கை கூடினாலும் கூடலாம் அல்லவா?

மைதானம் தயாராயிற்று; விளையாட்டுத் தொடங்கிவிட்டது. பந்தும், ஆபீசில் வேலை பழக வந்த 'அப்ரென்டிஸை'ப் போல் இங்கும் அங்கும் உதைபடலாயிற்று. தேவகட் ஸமஸ்தானத்திற்கு 'ஹாக்கி' முற்றிலும் புதிய விளையாட்டாகும். அறிவில் சிறந்தவர் சதுரங்கம் சீட்டு முதலிய கௌரவம் வாய்ந்த விளையாட்டு விளையாடுவார்களேயன்றி, குழந்தை விளையாட்டுகளெனக் கருதப்படும் உடம்பு அசையும் விளையாட்டு விளையாடுவது கிடையாது. விளையாட்டு மிக உற்சாகத்துடன் நடந்து வந்தது. பந்துடன் மனிதர் ஓடுவதைப் பார்த்தால் அலைகள் தான் முன்னேறுகின்றனவோ என்று தோன்றும். எதிர் தரப்பினர் அலையைத் தடுக்கும் இரும்புச் சுவர் போல் பந்தைத்தடுத்தனர்,

அந்திவரை விளையாட்டு இம் மாதிரி நடந்தது. யாவரும் வியர்வையில் குளித்தனர் என்றே சொல்லலாம். கண்ணும் முகமும் சிவக்க, மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, யாவரும் விளையாடினர். ஆனால் விளையாட்டின் முடிவு ஒரு தரப்பாருக்கு சாதகமாகவோ பாதகமாகவோ முடிய வில்லை. இருள் படிந்துகொண்டிருந்தது. மைதானத்துக்குச் சற்று தூரத்தில் ஒரு ஓடையிருந்தது. அவ்வழியாகப் போவோர் வருவோர் யாவரும் அந்த ஓடையில் இறங்காமல் முடியாது. அதன்மேல் பாலமொன்றும் இல்லை. விளையாட்டு முடிந்து எல்லோரும் இளைப்பாறிக் கொண்டிருந்தனர்: நெல் மூட்டை அடுக்கிய வண்டியொன்று அந்த நீரோடையில் இறங்கியது. வண்டிக்காரக் குடியானவன் வண்டியை மேலே ஏற்ற முயன்று கொண்டிருந்தான். ஆனால் சேறு ஒரு புறம் மேடு ஒரு புறம், இரண்டும் சேர்ந்து வண்டிக்காரன் முயற்சியை வீணாக்கிக் கொண்டிருந்தன. மாட்டை விரட்டுவான்; மறு நிமிஷம் இறங்கி வண்டிச் சக்கிரத்தைத் தள்ளுவான். ஆனால் வண்டிக்கு பாரம் அதிகம். வண்டி அப்படி மேலே கொஞ்சம் சென்றாலும் மறுகணம் சறுக்கி ஓடைக்கே வந்து விடும். குடியானவன் கோபத்துடன் பன்முறை மாட்டை அதட்டினான்; அடித்தான்: ஆனால் வண்டி மேலே ஏறினால் தானே? பாவம் நம்பிக்கையிழந்து சுற்றுமுற்றும் பார்க்கலானான். ஆனால் அங்கோ உதவி செய்வோர் எவரும் இல்லை. வண்டியை விட்டு அவனால் எங்கும் போகவும் முடியாது. பேராபத்தில் சிக்கிக் கொண்டான். இதற்குள் விளையாட்டு முடிந்து ஆட்டக்காரர்கள் கையில் ஹாக்கி மட்டையுடன் அவ்வழியாய்ச் செல்லலாயினர். குடியானவன் ஏக்கத்துடன் அந்தப் பக்கம் பார்க்கலானான். ஆனால் ஒருவரிடமும் வாய் விட்டு உதவி கேட்கத் துணியவில்லை. அவர்களும் அவனைப் பார்க்காமலில்லை. ஆனால் அவர்கள் பார்வை தன்னலத்தினாலும் போட்டாப் போட்டியாலும் அலக்ஷியத்தாலும் இரக்கமற்று மழுங்கிப் போயிருந்தது.

3

ஆனால் அவர்களிடையே இரக்கமும் வீரமும் வாய்ந்த வாலிபன் ஒருவன் இருக்கத்தான் இருந்தான். அவன் பந்தாட்டத்தில் காலில் அடி வாங்கியிருந்தான். ஆகவே மெள்ள மெள்ள நொண்டிக் கொண்டு வந்தான். அவன் தற்செயலாக வண்டியைப் பார்த்தான். வண்டியைப் பார்த்ததும் விஷயத்தை உணர்ந்தான். அப்படியே நின்றுவிட்டான். மட்டையை ஒரு பக்கம் வைத்தான். குடியானவனை அணுகிச் சொன்னான்:—'நான் உன் வண்டியைத் தூக்கிவிடட்டுமா?'

ஒரு ஆரோக்கியமுள்ள உயரமான மனிதன் தன் முன் நிற்பதைக் குடியானவன் கண்டான். பயத்துடன் சொன்னான்—'நான் உங்களிடம் எப்படிக் கேட்பேன் யஜமான்?' வாலிபன் கூறலானான்: 'ரொம்ப நேரமாய் இங்கேயே நிற்கிறாய் போலிருக்கிறது. நல்லது. நீ வண்டியில் ஏறி உட்கார். மாட்டை முடுக்கு. நான் வண்டிச் சக்கரத்தைத் தள்ளுகிறேன். வண்டி இதோ மேலே ஏறிவிடும் பார்.''

கிழவன் வண்டியில் ஏறி உட்கார்ந்தான். வாலிபன் சக்கிரத்தைத் தள்ளினான். ஓடையில் நிறைய சேறு இருந்தது. வாலிபனுடைய முழங்கால்வரை சேற்றில் புதைந்து விட்டது. ஆனால் வாலிபன் நம்பிக்கையிழக்கவில்லை. அவன் மறுபடியும் பிரயத்தினப்பட்டான். வண்டிக்காரன் மாட்டை விரட்டினான். மாடுகளும் உறுதியுடன் கழுத்தை வளைத்து முன்னே செல்ல முயன்றன. வண்டியும் மேலே சென்று விட்டது.

குடியானவன் வாலிபன் முன் கரம் குவித்துச் சொன்னான்—"ஐயா, நீங்கள் எனக்குப் பேருதவி செய்தீர்கள். இல்லாவிட்டால் நான் இரவு முழுதும் இங்கேயே இருந்திருக்க நேரும்".

வாலிபன் சிரித்துக் கொண்டே பதிலளித்தான்-"இதற்குப் பரிசு வழங்க அபிப்பிராயமா என்ன?"

குடியானவன் கம்பீரமான குரலில் சொன்னான்—"ஆண்டவன் அருளிருந்தால் தாங்களே திவான் ஆவீர்கள்."

வாலிபன் குடியானவனைக் கூர்ந்து பார்த்தான். ஒருவேளை ஸர்தார் ஸுஜன் ஸிங் இவன் தானோ என்று சந்தேகப்பட்டான். 'குரலும் தோற்றமும் அதே போல இருந்தது. குடியானவனும் வாலிபனை ஏற இறங்கப் பார்த்தான். வாலிபன் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை

(11-ம் பக்கம் பார்க்க)

எஸ். கிருஷ்ணன் மொழிபெயர்ப்பு

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஆடவாரமெல்லகூடி மன–
மாடு தாமு ஹரினி வேடி

அனுபல்லவி

க்ருஷ்ணுடு ஜூடக மனமு ஜலக்–
ரீட ஸல்ப மஞ்சிதினமு

சரணம்

1. கமல நேத்ருனிபாஸி ஸுகமா ஓட
கட்டு ஜேர்ப மனதரமா
2. ராஜ குமாருடு வீடு நவ-
ரத்ன ஸொம்முலு பெட்டி நாடு
3. பஸி பிட்ட காதடவம்மா வீடு
பயபடுனோ தெலியதம்மா
4. தல்லி தோசாடி பலுகுதுரேமன
தல்லு வஞ்ச தூருதுரே
5. மாடகு ஜோடௌநுகானி மன
யாடலு தெலியக போனி
6. யுவது லார மீலோனே மீரு
யோசிம்ப ப்ரொத்து பொய்யெனு
7. சாலுசாலிடு ராரம்மி ஓட
ஸலிலமந்து தோயரம்ம
8. த்யாக ராஜாப்துடு வீடு வனி-
தல மர்டலு வினலேடு

II

ஆடவார மெல்ல கூடி	—பெண்களாகிய நாம் எல்லோரும் சேர்ந்து
ஹரினி வேடி	—ஸ்ரீ ஹரியான கிருஷ்ணனை வேண்டிக்கொண்டு
மனமு ஆடுதாமு	—நாம் இந்த யமுனா நதிக்கரையில் விளையாடுவோம் என்று ஒரு கோபிகை சொன்னாள்
மனமு	—நாம்
க்ருஷ்ணுடு ஜூடக	—ஸ்ரீ க்ருஷ்ணன் நம்மைப் பாரா வண்ணம் (க்ருஷ்ணனுக்குத் தெரியாமல்)
ஜலகரீட ஸல்ப	—ஜலக்ரீடை செய்ய
மஞ்சி தினமு	—தகுதியான நல்ல நாள் இன்றேயாகும் (என்றாள் ஒரு கோபிகை)
கமல நேத்ருனி பாஸி	—தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ க்ருஷ்ணனை விடுத்து நாம் விளையாடுவது
ஸுகமா	—சுகத்தைக் கொடுக்கக் கூடியதா
ஓட—கட்டு ஜேர்ப்	—இந்த யமுனையில் நாம் ஓடத்திலேறி அதைக் கரை சேர்ப்பது
மனதரமா	—நம்மால் சாத்யமான காரியமா (என்றாள் ஒரு கோபிகை)
வீடு ராஜகுமாருடு	—இந்தக் கிருஷ்ணன் நந்தகோப மைந்தனாகிய ராஜகுமாரன்
நவரத்ன ஸொம்முலு பெட்டி நாடு	—நவரத்தினங்களால் செய்யப்பட்ட ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டிருக்கிறான் (என்றாள் ஒரு கோபிகை)
வீடு பஸிபிட்ட காதடவம்மா	—இந்தக் கிருஷ்ணன் சின்னக் குழந்தை அல்லவா அம்மா
பய படுனோ தெலியதம்மா	—ஓரிடத்தில் நம்முடன் வருவதற்கு பயப்படுவானோ என்னமோ தெரியவில்லை (என்றாள் ஒருகோபிகை)
தல்லிதோ	—தாயான யசோதையிடம்
சாடி பலுகுதுரே	—நம்மைப் பற்றி கோள் சொல்லி விடுவானேயாகில்
மனதலலு வஞ்ச தூருதுரே	—நம்முடைய தலை குனியும் வண்ணம் அவள் நம்மை தூற்றுவாளே (என்றாள் ஒரு கோபிகை)
மாடகு ஜோடொநுகானி	—நம்முடைய செய்கைகள் வார்த்தைக்கு இடமாகுமே அல்லாது
மனயாடலு தெலியகபோனி	—நாம் க்ருஷ்ணனுடன் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் இருக்கும் இடம் தெரியாமல் போய் விடுமே (என்றாள் ஒரு கோபிகை)
யுவதுலார	—தோதரிகளே
மீலோனே மீரு	—உங்களுக்குள்ளேயே நீங்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கிழவன் அறிந்துவிட்டான் போலும்! சிரித்துக் கொண்டு சொன்னான்—" ஆழ்கடலில் மூழ்கிக் குளித்தால் தான் முத்து அகப்படும்"

4

ஒரு மாதம் ஆகிவிட்டது திவானைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நாளும் வந்து விட்டது. யாவரும் முடிவை அறிய ஆர்வம் கொண்டிருந்தனர். ஒரு வேளை கழிவது ஒரு யுகம் செல்வது போலாகி விட்டது. ஒவ்வொருவனுடைய முகத்திலும் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறி நிழலித்தன. இன்று யாருக்கு யோகம் பிறக்கப் போகிறதோ! யார் மேல் லக்ஷ்மி கிருபாகடாக்ஷத்தைச் சொரியப் போகிறாளோ, யார் கண்டார்கள்? மாலை வேளையில் ராஜ தர்பார் அலங்கரிக்கப் பட்டது. நகரத்துப் பிரபுக்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தர்பாரிகள் யாவரும் கூடியிருந்தனர். விண்ணப்பதாரர்களும் விதவிதமான ஆடைகள் அணிந்து கொண்டு அங்கே வந்திருந்தார்கள்.

சர்தார் ஸுஜன் ஸிங் எழுந்து நின்றுகொண்டு சொல்லலானார். "திவான் பதவிக்கு விண்ணப்பம் செய்துகொண்டுள்ள நண்பர்களே, நான் உங்களுக்குக் கொடுத்த கஷ்டத்துக்கு என்னை மன்னிக்கவும். மனதில் ஈவிரக்கம், ஆத்மபலம் இவை உள்ள மனிதரை இப்பதவியில் அமர்த்த வேண்டும் என்று நான் விரும்பினேன். இதயம் என்றால் ஈவிரக்கம் வேண்டும். ஆத்ம பலம் என்றால் ஆபத்தை எதிர்த்து போராடுவதேயாகும். நான் எதிர்பார்த்தமாதிரி மனிதர் கிடைத்தது இந்த சமஸ்தானத்தின் பாக்யமேயாகும். உலகில் இத்தன்மையினர் குறைவாகவே இருப்பார்கள். அவர்கள் புகழுடனும் மரியாதையுடனும் உலகில் பிரகாசிப்பார்கள். நான், பண்டிதர் ஜானகிநாத் திவானாய் நியமிக்கப்படுவதற்காக என் மன மகிழ்ச்சியைத் தெரிவித்து கொள்கிறேன்"

உத்தியோகஸ்தர்களும் பிரபுக்களும். ஜானகிநாதரைப் பார்த்தார்கள். விண்ணப்பதாரர்கள் பார்வையும் ஜானகிநாதர் மேல் விழுந்தது. முதல் குறிப்பிட்டவர்கள் பார்வை ஜானகிநாதரை வரவேற்றது. இரண்டாவது குறிப்பிட்டவர் கண்கள் பொறாமைத் தீயைக் கக்கின.

ஸர்தார் ஸாஹேப் மேலும் கூறலானார்—"எவன் தனக்குப் பட்டுள்ள காயத்தையும் பொருட்படுத்தாமல் ஏழைக் குடியானவனுடைய பாரவண்டியை சேற்றிலிருந்து வெளியேற்ற முன் வந்தானோ, அவன் உள்ளத்தில் வீரம், ஆத்மபலம், இரக்கம் போன்ற உணர்ச்சிகள் நிறைந்திருப்பதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன், இப்படிப்பட்டவன் ஏழையை எந்த நாளும் துன்புறுத்தமாட்டான், அவன் திட சங்கல்பமுடையவன். ஆதலால் என்றும் உறுதியுடனிருப்பான். அவன் ஏமாற்றம் அடைந்தாலும் இரக்கம் அறம் இரண்டையும் கைவிட மாட்டான்."

யோசிம்ப	—யோசனை பண்ணிக் கொண்டிருந்தால்
ப்ரொத்து பொய்யனு	—வீணுக காலம் கழிந்து போய்விடும்
சாலு சாலு	—நீங்கள் யோசித்தது போதும் போதும்
இடு ராரம்மா	—இவ்விடம் வாருங்கள் அம்மா
ஓட ஸ்லிலமந்து தோயரம்ம	—ஓடத்தை ஜலத்தில் எல்லோரும் தள்ளுங்கள் (என்ருள் ஒரு கோபிகை)
விடு த்யாகராஜாப்துடு	—இந்தக் கிருஷ்ணன் தியாகராஜனுக்கு ஆப்த நண்பனுவான்
வனிதல மாடலு வினலேடு	—பெண்களாகிய நம்முடைய வார்த்தையை ஒரு போதும் கேளான், ஆகையால் அவனை அழைத்துச் செல்ல வேண்டாம் என்ருள் ஒரு கோபிகை

III

முன் கதைச் சுருக்கம்:—பக்தைகளான கோபிகாஸ்திரீகள் ஒரு சமயம் கண்ணனுடைய குழலோசையைக் கேட்டு பரவசமாகி அவனைத் தேடிக் கண்டு பிடித்து, அவனுடன் மிகுந்த அழகுடன் விளங்கும் யமுனு நதிக்கரையை அடைந்தனர். அங்கு தளிர் போன்று அழகிய கைகளுடைய கோபிகைகள் யமுனு நதியில் விளங்கிய வெண்மை நிறமுள்ள ஓடத்தை மிதக்க விட்டு அதில் ஏறி ஆனந்தமாக ஆடிப்பாடி விளையாட எண்ணங் கொண்டார்கள் என்று

நல்லனி யமுனு நதிலோ தெல்லனி ரங்கைன யோடதேலுசு மெரயன் |
பல்லவ பாணுலு பொடகனி ஸல்லாபமுதோட க்ரீட ஸல்ப தலசுசுன் ||

என்ற கந்த பத்யத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆடவாரு லெல்ல:—இது நௌகா சரித்திரத்தில் மூன்ருவது கீர்த்தனமாகும். கிருஷ்ணனை ஓடத்தில் தங்களுடன் அழைத்துச் செல்வது உசிதமல்ல என்பதற்கு கோபியர்கள் கூறும் காரணங்கள் இந்தக் கீர்த்தனத்தின் சரணங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆடவாரு:—ஒரு கோபிகை பகவானை வேண்டிக் கொண்டு எல்லோரும் விளையாடலாம் என்று மற்றவர்களை அழைக்கிருள். ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையில்

மாயனை மன்னு வட மதுரை மைந்தனை
தூயபெருநீர் யமுனைத்துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்

என்ற பாசுரத்தில் கூறப்பட்டுள்ள அபிப்பிராயம் போன்றே இச்சரணத்திலும் காணப்படுகின்றது.

க்ருஷ்ணுனி:—மற்ருெரு கோபிகை க்ருஷ்ணன் பாராவண்ணம் விளையாட வேண்டுமென்று அவனுடைய குறும்புத்தனமான விளையாட்டுக்கு பயந்தவளாகக் கூறுகிருள்.

கமலநேத்ருனி.—மற்ருெரு கோபிகை கண்ணன் பரமாத்மா என்ற தத்துவத்தைக்கூறி அவனில்லாது ஓடத்தை நடத்துவது சாத்தியமில்லாத காரியம் என்ற உண்மையைக் கூறுகிருள்.

பஸிபிட்ட:—கீத கோவிந்தத்தில் 'மேகைர் மேதுரமம்பரம்' என்று ஆரம்பமாகும் முதல் ச்லோகத்தில் 'நக்தம் பீருரயம்' என்று நந்தகோபன் கண்ணனைப்பார்த்து கூறியது போன்றே இங்கு கோபிகை க்ருஷ்ணனை மிகவும் பயங்கொண்ட குழந்தை என்ற காரணத்தைக்கூறி அவனை அழைத்துச் செல்ல மறுக்கிருள்.

தல்லிதோ:—மற்ருெரு கோபிகை யசோதாதேவி கோபித்துக்கொள்வாள் என்ற காரணத்தால் அழைத்துச்செல்ல மறுக்கிருள்.

சாலு சாலு:—கோபிகைகள் இவ்விதம் வீண் தர்க்கம் செய்து காலதாமதம் செய்வதைக் கண்டு சகிக்காத மற்ருெரு கோபிகை க்ருஷ்ணனைத் தங்களுடன் அழைத்துச்செல்ல வேண்டாம் என்று முடிவுகட்டி ஓடத்தை நடத்த ஏற்பாடு செய்யுமாறு அனைவரையும் தூண்டுகிருள்.

IV

ராகம் யதுகுல காம்போதி — மிச்ர சாபு தாளம்

(28-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ்-அவ. ஸம்பூர்ணம்.)

பல்லவி

; பா	தா	ஸ்ா ;	ஸ்ா ஸ்ா	நீ தா	;	தா மா	பா ;
ஆ	.	ட	வா .	.	ரு	லெல் .	ல
பா தா	ஸ்ா	பா ;	; . ;	பா மா	கா	ஸா ரீ	மா ;
கூ .	.	டி .		. .	.	. .	.
பா தா	;	ஸ்ா ;	நிஸ் ரிஸ்	நிஸ்ா	நிதா	தா மா	பா ;
.	ஆ	ட	வா . . .	. .	. கு	லெல் .	ல
பா தா	ஸ்ா	பா ;	; ;	பா மா	கா	கா ரீ	ரீ ஸா
கூ .	.	டி	. .	. .	.	ம .	ன .
;	ஸ்ாரீ	கா கா .	கா ;	கா ;	;	கா ரீ	கா ஸா
	மா .	. டு	தா	மு		ஹ ரீ	னி .
ஸ ரி ம	ப த ஸ்	தப மக	ம க் ரீ	ஸா ;	;	; ;	; ;
வே .	. .	. . .	டி . .	.			

(அனுபல்லவி சரணங்களை பல்லவி போன்றே பாடவும்.)

நீதிக் கதை

கடவுளை விட மேல்

★

எ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

கிறிஸ்துவப் பாதிரி ஒருவர் கிறிஸ்து மதத்தில் சேரும்படி மற்ற மதங்களைச் சேர்ந்த ஜனங்களுக்கு பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அந்த பிரசங்கத்தை அப்பு கேட்டுக்கொண்டிருந்தான். 'கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து நீங்கள் கிறிஸ்தவர்களாகி விடுங்கள். கிறிஸ்துவினிடம் நம்பிக்கையுடன் இருங்கள். இல்லையேல் நீங்கள் நிர்மூலமாகப் போய் விடுவீர்கள்' என்று அந்த பாதிரி அதிக உற்சாகத்துடன் பிரசங்கம் செய்தார். 'எனதன்புள்ள பாதிரியாரே! மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களெல்லோரையும் நரகலோகத்தில் கடவுள் தள்ளி விடுவாரென்ரு நீர் நினைக்கிறீர்?' என்று அப்பு கேட்டான். 'ஆமாம். அதிலென்ன சந்தேகம்' என்ருர் பாதிரியார். 'அங்கிங்கெனுதபடி எங்கும் கடவுள் நிறைந்திருக்கிருர். அவர் சர்வ வல்லமையுள்ளவர். அவருக்குத் தெரியாத விஷயமே கிடையாது. அவரால் செய்ய முடியாத காரியம் இல்லை. ஹிந்துக்களையும், மகம்மதியர்களையும், புத்த மதத்தைச் சேர்ந்தவர்களையும் அவர், நினைத்த மாத்திரத்தில், வேண்டுமென்ருல் கிறிஸ்தவர்களாகச் செய்து விட முடியும். ஆனல் ஏன் அவர் அப்படிச் செய்யவில்லை? அவ்வாறு செய்ய அவருக்கு இஷ்டமில்லை என்பது நிச்சயமாகத் தெரிகிறது. உமது தெய்வத்தைவிட நீர்மேலானவரா?' என்று அப்பு எடுத்துச் சொன்னுன்.

மரியாதை

உயர்தரக் கலாசாலையில் சேர்ந்து படிக்க ஆரம்பித்த பிறகும் கூட அப்புவுக்குப் படிப்பின் மீது கவனம் செல்லவில்லை. எல்லோரும் ஒரே மாதிரியான தேசிய உடையைஅணிவதற்கும், கோபீணத்தையும் அதற்கு மேல் எந்த உடையையாவது அணிவதற்கும், உத்திரவு பிறப்பிக்கும்படி வேண்டிக் கொள்ள, அவன் மாணவர்களை அழைத்துக் கொண்டு, கலாசாலையின் தலைவரிடம் சென்ருன். அந்தமாதிரியான உடையில் கலாசாலைக்கு மாணவர்கள் வருவது மரியாதைக்கு விரோதமான செய்கையென்பதில் சந்தேகமில்லை" என்று கலாசாலைத் தலைவர் சொன்னுர். 'ஐயா, தங்களையும் என்னையும் ஆடையின்றிப் பிறக்கும்படி கடவுள் செய்ய வில்லையா? கடவுள் மரியாதை தெரியாதவரா? இவ்வுலகில் தோன்றிய பிறகு நாம் ஸ்திரீகள் முன்பு ஆடையின்றி திரிந்து கொண்டிருக்கவில்லையா? கோபீணத்தைக் கட்டிக் கொண்டபிறகும் கூட ஏன் மரியாதைக்கு விரோதமான காரியமென்று தாங்கள் கருத வேண்டும்' என்று அப்பு சொன்னுன்.

நவ நாகரீகம்

★

ஒரு வளையல்

★

காசினி எழுதியது

. . . 'எங்கே, இப்படி உன் கையைக் காட்டு? புதிய தினுசா? எப்பொழுது வாங்கினுய்? என்ன விலை?' என்று ஆவலுடன் மாலினி கையில் இருந்த வளையலைக் கண்ட பங்கஜம் கேட்டாள்.

'புதிய தினுசு தான், விலை தெரியாது; கல்கத்தாவில் இருந்து என் மாமி அனுபபினுள்!' என்ருள் மாலினி.

வளையல், கண்ணுடி வளையல் தான், ஆழ்ந்த நீல நிறம்; சுமாருக்கு ஒரு விரல் அகலம் இருந்தது. வளையல் மேடும் பள்ளமுமாக, மலையும், அடிவாரவும் போல மாறி மாறி இருந்தது. வளையலின் மேல் பக்கத்துக்கு லேசாக சரிகைப் பூச்சுக் கொடுத்திருந்தது. இதன் வழியாக நீலநிறம் மங்கலாகத் தெரிந்தது. ரொம்பவும் நாசூக்காக இருந்தது.

'ஒரு ஜோடி வளையல் தானு அனுப்பினுள்? இவ்வளவு அழகான தினுசை அனுப்பும்போது நாலைஞ்சு ஜதையாவது அனுப்பப் படாதோ?' என்ருள் நளினுதேவி.

'அதுக்கென்ன இப்போ! எழுதி உங்கள் கை அளவுக்குச் சரியாகத் தருவிச்சுத் தரேன்!' என்று மாலினி சமாதானம் சொன்னுள். நான் கூட சிகப்பில் இந்த தினுசில் எனக்கு ஒரு ஜதை தருவிக்கும்படிச் சொன்னேன்.

ஒரு புடவை

வளையிலிருந்து பேச்சுத் துணியில் திரும்பிற்று: 'நான் சில நாட்களுக்கு முன் ஒரு புடவை பார்த்தேன்; ரொம்பவும் அழகாக இருந்தது!' என்று சொல்லிப் பேச்சை நிறுத்தி, பங்கஜத்தின் ஆவலை நளினுதேவி தூண்டினுள்.

'என்ன புடவை? என்ன நிறம்? என்ன விலை?' என்று பங்கஜம் உடனேயே கேட்கவே, எங்களுக்கு அடக்கமுடியாமல் சிரிப்பு வந்தது. பிறகு அவளுக்குக் கோபம் வரவே:— 'கதர் புடவை: கலியாணப் பெண்ணுக்கு கதர் வாஙக வேண்டும் என்று நான் சென்றிருந்த ஒரு கலியாண வீட்டில் வாங்கி இருந்தார்கள். ஆறு கஜம் புடவை தான். மிகவும் மெல்லிய. பழுப்பு நிறமான கதர். ஐந்து விரல் அகலத்துக்கு ஆழ்ந்த சிகப்புக் கரை; இதில் ஜரிகை உத்திராக்ஷம் பேட்டுப் போட்டிருந்தது. புடவை ஒரு வித கம்பீரமான சோபையுடன் இருந்தது: விலையும் நாற்பது ரூபாய்களுக்குஉள் தான்!' என்று கூறி, நளினுதேவி பஙகஜத்தை சமாதானம் செய்தாள். புடவை, வாஸ்தவமாகவே நளினு சொன்ன மாதிரியில், அழகாகவும், நாசூக்காகவும் தான் இருந்தது.

மையிட

'நீ சொன்னயே என்று என் மருமாளைமேல் இமைக்கு மையிட்டுககோ! இது தான் இப்போதைய பாஷனும். கண்ணும் பெரிசாக, சோபையுடன் இருக்குமாம்! என்று சொன்னேன். இது இமை மேல எல்லாம் பரவி, நன்ருகவே இல்லை. நீ கூடவா இபபடிச் செய்து பாராமல் எழுதினுய்?' என்று நீ கோபமாக எழுதுகிருய்.

நான் எழுதினதில் யாதொரு பிசகும் இல்லை; ஆனல் உபயோகிக்கும் மையில எண்ணைப் பசை அதிகம் இருக்கக் கூடாது. ஆள் காட்டி விரலில் மையை லேசாக எடுத்து, தலையைச் சுத்தி மூக்கைத் தொடும் கதையாக மேல் பக்கமாகக் கையைக் கொண்டு வந்து, மேல் இமையைத் தூக்கி, இதன் உள் புரமாக மையை ஒரே சீராக இட வேண்டும். பிறகு, ரப்பையின் மேல் லேசாக கொஞ்சம் க்ரீம், அல்லது துளி எண்ணையைத் தடவி, ரப்பை மேல் வீந்திருக்கும் மை தெரியாமல் தடவி விட வேண்டும். கண் ஓரத்தில் சற்றே கனமாக மையிட்டு, இதையும் லேசாகத் துடைத்து விடவேண்டும். இவ்விதம் செய்தால் கண் அகலமாகவும் பிரகாசமாகவும் ஜொலிக்கும் மைக்கு பதிலாக இதற்கு என்று விற்கப்படும் மஸ்காராவையும் உபயோகிக்கலாம். முக்கியமாக மையில் எண்ணைப் பசை அதிகம் இருக்கக் கூடாது மேல் இமையின் உள் பக்கம் இட வேண்டும். இல்லாவிட்டால் மை கரைந்து அவலக்ஷணமாக வழியத்தான் செய்யும். கண் பெரிதாக உருண்டையாகக் காட்டவேண்டுமானுல், விழிக் கோணத்தில் மையை மிகவும் லேசாகத் தடவ வேண்டும். நீண்டு காட்ட, இங்கே சற்று மிகவும் குறைச்சலாகவே கனக்க இட வேண்டும்.

சென்னை வாசிகளுக்கு
முக்கியம் வேண்டியது!
"மை ஷாப்"
ஆகையால்
பழையபடி
பழைய விலாசத்திலேயே
ஜூலை 1-ந் தேதி
புதன்கிழமை
திறக்கிறோம்.
யாவரும் வருக!
கேவல்ராம்ஸ் 9-13, நடடான் பஜார், மதராஸ்.

பாலர் பாதுகாப்பு விடுதி

இங்கிலாந்தில் தாய்மார்கள் யுத்த அலுவல்களை அதிகம் கவனிக்கிற படியால், அவர்கள் தங்களது குழந்தைகள் விஷயத்தில் அதிக கவனம் செலுத்த முடிவதில்லை. இதற்காக பிரத்யேக விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. படத்தில் சிறு குழந்தைகள் குளிப்பாட்டப்படுவதைப் பார்க்கலாம். அவைகளுக்கு எவ்வளவு உத்சாகம்! பாருங்கள்!

சித்திரமும் சிருங்காரமும்

யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்

அமெரிக்க யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷனுக்காக எட்வர்ட் ஸ்மால் ஆறு உன்னத படங்களைத் தயாரிக்க திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார். இது மாதிரி இதற்கு முன் எவரும் திட்டமிட்டுக்கொண்டது கிடையாது. "கார்ஸிகன் ப்ரதர்ஸ்" என்ற படத்தில் டக்ளஸ பேர்பாங்ஸ் ஜூனியர் இரட்டை வேஷத்தில் தோன்றுகிறார்.

ஜார்ஜ் ப்ரென்ட், ஜோன் பென்னட் ஆகிய இருவரும் நடிக்கும் "ட்வின் பெட்ஸ்" என்ற படம் ஒரே ஹாஸ்ய மயமானது. படம் பூராவும் ஒரே விவாகக் கோளாறுதான்!

"ஜெண்டில் மன் ஆப்டர் டார்க்" என்ற படம் உணர்ச்சியை எழுப்பவல்லது: ஆவலை அதிகரிக்கச் செய்வது. ப்ரியன் டான்லெவி, மிரியம் ஹாப்கின்ஸ், ப்ரெஸ்டன் பாஸ்டர் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

ஷெர்லி டெம்பிள் நடிக்கும் ஒரு படமும் தயாராகும். "லிட்டில் ஆனி ரூனி" என்ற படத்தில் முன்பு மேரி பிக்போர்ட் நடித்து, பிரசித்தி பெற்றிருக்கிறார். இப்போது ஷெர்லிக்கும் இந்தப் படத்தின் மூலம் புகழ் அதிகமாகக் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. வில்லியம் கார்கன், ஹென்ரி ஹல் ஆகியோரும் நடிக்கின்றனர்.

சார்லஸ் ரிக்கில்ஸ், சார்லஸ் வின் னிங்கர் ஆகியோர் நடிக்கும் "ப்ரெண்ட்லி எனிமீஸ்" என்ற படமும் உயர்தரமானது.

கடைசியாக "ருடால்ப் வாலண்டினோவின் வாழ்க்கை" என்ற படத்தையும் ஸ்மால் தயாரிப்பார். ஜார்ஜ் ரடாப் இந்தப் படத்தை டைரக்ட் செய்வார். ருடால்ப் பிரபல நடிகர்: அவர் ஜீவித்திருந்த காலத்தில் அவர் நிகரற்றவராய் விளங்கினார்.

* * *

சார்லி சாப்ளின்

சார்லி சாப்ளின் ஒரு படப் பிடிப்பு பூர்த்தியான பின்பு செய்யும் அலுவல்கள் குறிப்புக்குரியவை. சாப்ளின் தான் உலகத்திலேயே சிறந்து விளங்கும் ஹாஸ்ய நடிகர்.

சார்லியின் மனதில் ஏதாவது ஒரு எண்ணம் உதித்தால், அதைப்பற்றி தீர்க்கமாக அவர் சிந்தித்துப் பார்ப்பார்: நீடித்த யோசனை நடைபெறும். இதற்கப்புறம் தான் பட உற்பத்தியைப்பற்றி சிந்தனை. படப் பிடிப்பு வேலையை சாப்ளின் ஆரம்பித்துவிட்டால் ஒருவித மான தவக்கமும் இராது. தாம் தயாரிக்கும் படங்களை அவரே தான் டைரக்ட் பண்ணுவதும் வழக்கம். ஒவ்வொரு காட்சியும் படம் பிடித்தானவுடன், உடனே அவர் ஸ்டுடியோவில் உள்ள தமது அறைக்குள் போய், அதைத்துண்டிக்கும் விஷயத்தில் சிரத்தை காட்டுவார். ஒவ்வொரு காட்சியையும், அதன் நீளத்தையும், அவ்வப்போது பார்த்து விடுவது அவரது வழக்கம்: எல்லாவற்றையும் தாமே நேரில் கவனிப்பார்: பிறர் பொறுப்பில் விடுவது கிடையாது.

அவர் தயாரிக்கும் படங்களில் வரும் பாட்டுகளில் பெரும் பகுதி அவரால் தான் எழுதப் பட்டவை. "ஸிடி லைட்ஸ்" "தி கோல்ட் ரஷ்" "மாடர்ன் டைம்ஸ்" "க்ரேட் டிக்டேடர்"—யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் மூலம் ரிலீஸாகும் இந்தப் படங்களில் இருக்கும் சங்கீதம் பூராவுக்கும் சாப்ளின் தான் காரணபூதர். சாப்ளின் பியானோ வாசிப்பதில் சமர்த்தர். ஆகவே கடைசியில் வெளிக்காட்டப் படும் படம் எல்லோருக்கும் திருப்திகரமாக விளங்குகிறது



ரீட்டா ஹேவர்த்

அட்டைப் படம்

பம்பாய் டாக்கீஸார் படமொன்றில் லீலா சிட்னிஸும் அசோக்குமாரும் ஊஞ்சலாடுகின்றனர்



22-6-42ந் தேதி காலஞ் சென்ற முக்கூடல் பிரபல வியாபாரி த. பி. சொக்கலால்.

சிறுவர் பகுதி

★

உபகாரத்தின் உயர்வு

★

எம். எஸ். கமலா

வெகு வருஷங்களுக்கு முன் ராமாநந்தன் என்னும் ஓர் சிறுவன் மிக மந்த புத்தியாயிருந்தான். அவனை அவன் வீட்டார்கள் எவ்வளவோ புத்திமதி சொல்லித் திருத்த முயன்றும் அவன் திருந்தவில்லை. நல்லத்தனமாயும், பயமுறுத்தியும், சொல்லத்தகாத சொற்களால் சொல்லியும் பார்த்தார்கள். அவன் எதற்கும் இசையவில்லை. ஆனால் அவனிடம் ஓர் உயர்ந்த குணமிருந்தது. அவனிடம் சஹாயம் பெற முயன்றால் அவன் தன் சரீர கஷ்டத்தையும் கவனிக்காமல் பிறர் வேலையில் ஈடுபடுவான். அவன் வீட்டார் இவ்வுயர்ந்த குணத்தைக் கவனிக்காமல் அவனை வசவு சொற்களால் அர்ச்சனை செய்து கொண்டு வந்தார்கள். அதனால் அவனுக்கு வேதனையோ விசாரமோ கிடையாது.

ஒரு நாள் ராமாநந்தன் தன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அச்சமயம் ஓர் குதிரை வண்டி நாலுகால் பாய்ச்சலில் வந்துக் கொண்டிருந்தது. அவனுடன் விளையாடிக் கொண்டிருந்த மற்றொரு பையன், தன் கோலியை குழிக்குள் தள்ளுவதிலேயே சிரத்தையாயிருந்தான்; வண்டி வருவதை கவனிக்காமல் கோலியின் மேலே குறியாயிருந்தான். ராமாநந்தன் அவனுக்கு வரும் ஆபத்தையறிந்து அவனை ஒரே யடியாய் தூக்கிக்கொண்டு அப்புறம் சென்றான். இதைக் கவனித்த அவ்வண்டியில் வந்த கனவான் வண்டியை நிறுத்தி ராமாநந்தனின் உயரிய குணத்திற்கு மெச்சி அவனைத் தன்னுடன் வரும்படி யழைத்தார். அவன் அதற்கிணங்கவில்லை.

கனவான் ராமாநந்தனை நோக்கி "சிறுவா, இன்றைக்கல்ல எப்பொழுதாகிலும் உனக்கு ஏதாவது சஹாயம் வேண்டியிருந்தால் லக்ஷ்மீபுரத்திற்கு வந்து என்னைப் பார்" என்று சொல்லி சென்றார். ராமாநந்தன் அதற்கு தலையசைத்து தன் சம்மதத்தைக்கூட வெளியிடவில்லை. வண்டியில் வந்தவரோ ராமாநந்தனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு "இச்சிறிய வயதிலேயே அஞ்சா நெஞ்சத்துடன் விசால மனப் போக்குடையவனாய் தன்னலத்தியாகியாய் இருக்கும் இப்பையன் பிற்காலத்தில் எப்பேர்ப்பட்ட உயர்வுள்ளவனாய் இருக்க மாட்டான்" என்று நினைத்துக்கொண்டு சென்றார்.

காலச் சக்கரம் சுழன்று நாடுகளெல்லாம் நகரங்களாயின. கீர்த்திமான்களெல்லாம் மறைந்தார்கள். செல்வ வந்தர்களெல்லாம் ஏழ்மையின் பெருமையை அனுபவிக்கத் தொடங்கினார்கள். அஷ்ட தரித்திரர்களெல்லாம் ஐச்வர்யவான்களானார்கள். மந்தபுத்தியுள்ள ராமாநந்தனும் உயர்ந்து வளர்ந்தான். அவன் மந்த புத்தியும் வளர்ந்திருந்தது. ஆனால் உபகார சிந்தையும் பிறர்க்கு வீணாக உழைப்பதும் மாத்திரம் அன்று இருந்ததைப் போலவே இன்றும் இருந்தது.

ராமாநந்தனுக்கு படிப்புமில்லை, பணமுமில்லை. அவன் பெற்றோர்கள் அவனை அப்படியே விட்டு அவர்கள் வந்த வேலையாகிவிட்டதால் வாழ்க்கையை நீத்தார்கள். தாய் தந்தையர் இருக்கும் வரை ஒரு விசாரமுமில்லாமல் ஊர்ச் சுற்றியாயிருந்த ராமாநந்தன் அவர்களுக்குப்பின் வயிற்றை வளர்க்க கஷ்டப்பட வேண்டியதாயிற்று.

தன் ஊரில் தனக்கு ஒன்றும் கிடைக்காமல் போகவே ஊரை விட்டு வேறு இடத்தைத்தேடிச் சென்றான். அவன், அப்படி செல்லுங்கால், 'லக்ஷ்மீபுரத்தி'ற்கருகாமையிலுள்ள காட்டின் வழியே சென்றான். அக்காட்டில் ஓர் அழகிய பெண் அழும் சப்தம் கேட்கவே அக்குரல் வரும் திசையை நோக்கிச் சென்றான். அங்கொரு மரத்தில் ஓர் அழகிய பெண்ணைக் கட்டி வைத்து அவளைச் சுற்றி பயங்கரமான சிலைகளையும் விக்ருத ரூபங்களையும் வைத்திருந்தது. அதற்கப்பால் ஓர் நீச மனிதன் வீற்று "இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்று மிரட்டிக் கொண்டிருந்தான்.

ராமாநந்தன் பார்த்தான்: அங்கிருந்த சிலைகளில் ஒன்றை எடுத்து ஓங்கி அந்த நராதமனை ஓர் அடி அடித்தான். அவன் அப்படியே நிலத்தில் சாய்ந்தான். மரத்தில் கட்டப்பட்டிருந்த பெண்ணைக் கட்டவிழ்த்து "நீ எங்கிருப்பவள்?" என்று கேட்டான். அவள், "அய்யா! நான் லக்ஷ்மீபுரத்திலிருக்கும் ராஜசந்திரரின் பெண். இந்த மந்திரவாதி என்னை மயக்கி இவ்விடம் அழைத்து வந்து என்னை இம்சிக்கத் தொடங்கினான். இன்று அவன் செய்த கோர ரூபங்களையும் அவன் கொடூர எண்ணத்தையும் கண்டு அஞ்சி அலறும்போது நீங்கள் வந்து உதவினீர்கள்" என்று சொன்னாள்.

ராமாநந்தன் அப்பெண்ணையழைத்துக் கொண்டு லக்ஷ்மீபுரம் சென்று அவள் வீட்டில் விடச் சென்றபோது, வாயிற்புரம் கவலையே உருவாய் நின்ற ராஜசந்திரர் மகளைக் கண்டதும் ஆநந்தத்துடன் ஓடிக் கட்டிக் கொண்டார். பிறகு ராமாநந்தனைப் பார்த்தார். அவன் பேர் தெரியாததால் "பையா! நீயா என் மகளை அழைத்து வந்தாய்? அன்று என் வண்டியின் கீழ் உயிரை விட இருந்த உயிரை மீட்டாய். இன்று உயிர் விடச் சித்தமாயிருந்த என் உயிர் மகளை மீட்டு எனக்கு ஆநந்தமளித்தாய்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லி அவனை யாரென்று விசாரித்தார்.

ராமாநந்தன் தன் ஸ்திதியை சொல்லி தான் வேலை தேட புறப்பட்டதாகச் சொன்னான். ராஜசந்திரர் ராமாநந்தனை தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு மகளையும் கொடுத்து மணம்முடித்தார். அவன் உபகாரத்தின் தன்மையே அவனை உயர் ஸ்திதிக்கு கொண்டு வந்தது.

க்ளஸ்டர் கோமகன் மத்திய கிழக்குத் திசையில் சில துருப்புகளைப் பார்வையிட்டார். சமீபத்தில் இவர் இந்தியாவுக்கும் வந்திருந்தார். முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டுவருகிறார்.



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும். நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானாலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் கூந்தல் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக்காரணத்தால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக்கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்பகேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12; மேற் செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி வடிகா

காமசக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும்சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோட், மதராஸ்.

காப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42,
Churchgate St., Fort, Bombay.
Phone 21343.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

வைத்திய ரத்னம் பண்டித
எம. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்
ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11. 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்
பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியதை தீர்ப்பதில் இணையற்றது. குழந்தைகளும்பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேன்போன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்
எவ்வித மலபந்தத்தையும் நிவ்ருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள் தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தமூலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணிஅனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்
இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்றால்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்
க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனால் சுகமடைந்திருக்கிறார்கள். 100-மாத்திரை ரூ. 10. 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்
தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்
எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக் கணக்கானபேர்சுகமடைந்திருக்கிறார்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணா 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

வேறு சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும்.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)

"ஆர்யன் பார்மஸி — "ஆர்ய கிருஹம்"
11, ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

இஸ்லாமிய நூல்கள்

மஹான் முக்ம்மது நபி	0	8	0
அபுபக்கர் ஸித்திக்	0	12	0
உமரெ பாரூக்	1	0	0

முஸ்லீம் வாசகம் 1-5 வகுப்புவரை கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

முல்லையப்பசாமி.
வைத்தியசாலை,
பழனி. S. I.

நவயுகப் பிரசுரங்கள்

வானொலியும் ஒளிபரப்பும்	2	0
புதுமைப்பித்தன் கதைகள்	2	0
தமிழ்க் குமரி	1	12
திருச்சி ஜெயில்	1	12
பெண்	1	12
கிரஹதாகம் (பாகம் 1)	1	12
ஷை (பாகம் 2)	1	12
மின்சாரத்தின் விந்தை	1	12
மகாராஷ்டிர ஜீவன் உதயம்	1	12
தற்காலத்தமிழ் இலக்கியம்	1	8
இந்தியாவும் பொதுவுல சமுதாயமும்	1	8
கட்ட பொம்மு	1	8
வின்ஸ்டன் சர்ச்சில்	1	8
பேஸிஸ்ட் ஜடாமுனி	1	8
ஆரம்ப அரசியல் நூல்	1	8
நடைச் சித்திரம்	1	8
மழையும் புயலும்	1	8
உலகம் பலவிதம்	1	4
ஸ்டாலின்	1	4
பாதுகா பட்டாபிஷேகம்	1	4
ஆங்கிலக் கவிதை மலர்கள்	1	0
ஷை பரிசுப் பதிப்பு	1	8
அருள் மொழிகள்	1	0
தமிழ் அறிஞர் முதலியார்	1	0
அற்புத உலகம்	1	0
உலகத்துச் சிறுகதைகள்	1	0
தேவதாஸ்	1	0
பூகிஸ்தான்	1	0
கோயரிங்	0	12
வெற்றி யாருக்கு?	0	12
சீதா கல்யாணம்	0	12
மாதவி	0	12
முப்பெரும் தலைவர்	0	10
சிந்தனையும் மின்னொளியும்	0	10

சுதேசமித்திரன்
புத்தகசாலை, சென்னை.





1. ஸ்ரீ பி. வெங்கடரமணராவ் சென்னை ஹைகோர்ட்டிலிருந்து விலகியபோது நடத்தப்பட்ட உபசாரம். 2. வட சென்னை காங்கிரஸ் ஊழியர் மகாநாட்டை ஸ்ரீ ஸி. ஆர். திறந்து வைத்தரா. (ஐ. பி. பி. எஸ்.) 3. தபால்காரர் சங்க மகாநாடு. (பி, என். எ.)

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.-Editor, C.R. Srinivasan, B.A.